# தமிழ்ப்பூங்கொத்து

( கவிதைத்தொகுப்பு )


தொகுப்பாசிரியர்

இராம வேல்முருகன்



வெளியீடு

தஞ்சைத் தமிழ் மன்றம்

புத்தகத்தின் பெயர் : தமிழ்ப்பூங்கொத்து
வகை : கவிதை
தொகுப்பாசிரியர் : இராம வேல்முருகன்

வெளியீடு : தஞ்சைத்தமிழ்மன்றம்
12 புங்கஞ்சேரி தெரு
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு

வடிவமைப்பு : தமிழ்நெஞ்சம் அமின்
editor@tamilnenjam.com

பக்கம் : 96
சைஸ் : டெமி 1/8
விலை : ரூ 150 / -

# உள்ளடக்கம்


தொகுப்பாசிரியர் உரை

வாழ்த்துரை - திரு க முருகன்
வாழ்த்துரை - திரு கு தமிழரசு
வாழ்த்துப்பா - திரு வீரபாண்டியத்தென்னவன்
வாழ்த்துரை - திரு பாலு கோவிந்தராஜன்
வாழ்த்துரை - திரு பொற்கைப்பாண்டியன்
வாழ்த்துரை - திரு முத்துப்பேட்டை மாறன்
வாழ்த்துரை - திரு கருங்கல்.கி கண்ணன்
வாழ்த்துப்பா - திரு பொன்மணிதாசன்
வாழ்த்துப்பா - திரு அனுராதா கட்டபொம்மன்
வாழ்த்துப்பா - திரு இரா இளஞ்செழியன்
வாழ்த்துப்பா - திரு வெற்றிப்பேரொளி
பாடல் - திரு பிரபு சந்திரன்
பாடல் - திரு சிவா ஜி
பாடல் - திரு மதியழகன்
கவிதை - திரு தமிழ்நெஞ்சம் அமின்

கவியரங்கக் கவிதைகள்

| | |
|---|---|
| கவிஞர் சரசுவதி பாஸ்கரன் | 24 |
| கவிஞர் ராணி லட்சுமி | 25 |
| கவிஞர் செல்லா மாரிமுத்து | 26 |
| கவிஞர் ராஜபிரபா | 27 |
| கவிஞர் ஆ. நடராஜன் | 28 |
| கவிஞர் வா. சண்முகம் | 29 |
| கவிஞர் தென்றல் கவி | 30 |
| கவிஞர் மகேஸ்வரி கிருஷ்ணசாமி | 31 |
| கவிஞர் கீர்த்தி கிருஷ் | 32 |
| கவிஞர் கவிதா அசோகன் | 33 |
| கவிஞர் வீரா (நெருப்புக்கவிஞர்) | 34 |
| கவிஞர் இந்திராணி தங்கவேல் | 35 |
| கவிஞர் அமுதன் (முத்துவிஜயன்) | 36 |
| கவிஞர் சிவக்குமார்வீராச்சாமி | 37 |
| கவிஞர் பாக்கியராஜ் | 38 |
| கவிஞர் மஞ்சுளா ரமேஷ் | 39 |
| கவிஞர் பாண்டுரங்கன் | 40 |
| கவிஞர் உஷாதேவி கோவிந்தசாமி | 41 |
| கவிஞர் செல்வா ஆறுமுகம் | 42 |
| கவிஞர் மன்னை மணிமாறன் | 43 |
| கவிஞர் ஆதிரை | 44 |
| கவிஞர் புதுவை சரவணன் | 45 |
| கவிஞர் நாராயணன் சங்கர் | 46 |
| கவிஞர் மகேஸ்வரி கண்ணன் | 47 |
| கவிஞர் புதூர் சீனிவாசன் | 48 |
| கவிஞர் நா. பிரகாஷ் | 49 |
| கவிஞர் சண்முகப்ரியா | 50 |
| கவிஞர் செல்வம் பெரியசாமி | 51 |
| கவிஞர் சர்மிளா ஏஞ்சல் | 52 |

| | |
|---|---|
| கவிஞர் கிருஷ்ணதிலகா | 53 |
| கவிஞர் காந்தி கருணாநிதி | 54 |
| கவிஞர் பாலு கோவிந்தராசன் | 55 |
| கவிஞர் செந்தில்சுலோ | 56 |
| கவிஞர் நா. மூதுரான் | 57 |
| கவிஞர் க. மணிவண்ணன் | 58 |
| கவிஞர் சு. சிவசுப்ரமணியன் | 59 |
| கவிஞர் மருதூர் மாமு | 60 |
| கவிஞர் எம். ஆர். செயந்தி | 61 |
| கவிஞர் சுகுமாறன் கந்தையா | 62 |
| முனைவர் சா. சே. ராஜா | 63 |
| கவிஞர் ரேணுகா சுந்தரம் | 64 |
| கவிஞர் துரைராஜ் | 65 |
| கவிஞர் வி. க. பொன்னையா | 66 |
| புலவர் தியாகு. சோமு | 67 |
| கவிஞர் ஈழவன் தாசன் | 68 |
| கவிஞர் தீனதயாளன் ராமசாமி | 69 |
| கவிஞர் குமரன் அம்பிகா | 70 |
| கவிஞர் ஆயை மணிமாறன் | 71 |
| கவிஞர் க.சந்திரமோகன்; | 72 |
| கவிஞர் சந்திரசேகர் | 73 |
| கவிஞர் இராம வேல்முருகன் | 74 |
| முனைவர் பாரதி ஆறுமுகம் | 75 |
| கவிஞர் தங்கைபாலா ஆசினி | 76 |
| கவிஞர் சோதிபாஸ் முனியப்பன் | 77 |
| கவிஞர் உசாதேவி பார்த்தசாரதி | 78 |
| கவிஞர் கண்ணதாச முருகன் | 79 |
| கவிஞர் குஞ்சித சுகுமார் | 80 |
| கவிஞர் பொ. முத்துராக்கு | 81 |
| கவிஞர் அ.தமிழ்மைந்தன் | 82 |
| கவிஞர் மணிமேகலை ராஜன் | 83 |
| கவிஞர் நிறைமதி நீலமேகம் | 84 |
| கவிஞர் அரவிந்த் கார்த்திக் | 85 |
| கவிஞர் மாலதி திரு | 86 |
| கவிஞர் சதீஷ் காளிதாஸ் | 87 |
| கவிஞர் கவின் மொழி வர்மன் | 88 |
| கவிஞர் சித்தார்த் பாண்டியன் | 89 |
| முனைவர் த. செல்வராஜ் | 90 |
| கவிஞர் முகிலை பாஸ்ரீ | 91 |
| கவிஞர் கண்ணன்கோபாலன் | 92 |
| கவிஞர் விசு இமானுவேல் | 93 |
| கவிஞர் இளையதீபன் மகாலிங்கம் | 94 |
| கவிஞர் சாவித்திரி | 95 |
| கவிஞர் சிவா ஜி | 96 |

# தொகுப்பாசிரியர் உரை

வணக்கம் நண்பர்களே

தஞ்சைத் தமிழ்மன்றம் தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றதே தெரியவில்லை. தொடக்க விழாவின்போது ஒரு கவிதைத்தொகுப்பு வெளியிடப்பட்டு தற்போது தஞ்சைத் தமிழ்மன்றத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கவிதைத்தொகுப்பு வெளியிடுகிறோம் என்பதில் பெருமகிழ்வே. இரண்டாவது தொகுப்பு எது கவிதை. மூன்றாவது தொகுப்பு தமிழ்ப்பூங்கொத்து. இத்தொகுப்பு கவியரங்கத்தில் பங்கு கொண்டு கவிபாடும் கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு. நூற்றுக்கும் மேலான எண்ணிக்கையில் கவிபாட கவிஞர்கள் தயாராக இருந்தாலும் குறித்த காலத்திற்குள் தங்கள் கவிதைகளை அனுப்பிய 69 கவிஞர்களின் கவிதைகள் மற்றும் வாழ்த்துக்கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மகளிரெனும் மாபெரும் சக்தி என்ற தலைப்பில் 30 கவிதைகளும் திருக்குறளில் வாழ்வியல் நெறிப்படுத்தல்கள் என்ற தலைப்பில் 16 கவிதைகளும் அன்னைத்தமிழே வாழி என்ற தலைப்பில் முற்றும் மரபுக்கவிதைகளாகவே 23 கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. வாழ்த்துக்கவிதை மற்றும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிய கவிமாமணிகள் வீரபாண்டியத்தென்னவன், பாலு கோவிந்தராசன், பொற்கைப்பாண்டியன், அனுராதா கட்டபொம்மன், வெற்றிப்பேரொளி, பொன்மணிதாசன், முத்துப்பேட்டை மாறன், கருங்கல் கி கண்ணன், இளஞ்செழியன் மற்றும் பாடல்கள் எழுதிய நண்பர்கள் பிரபு சந்திரன் மதியழகன் (சிங்கப்பூர்) இயக்குநர் சிவா ஜி ஆகியோருக்கு மன்றத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். திருமிகு தமிழ்நெஞ்சம் அமின் பிரான்சு அவர்கள் கவிதையும் இடம்பெற்றுள்ளது கூடுதல் சிறப்பு. அவரே இந்நூலை குறுகிய கால்த்தில் வடிவமைப்பும் செய்து தந்திருக்கிறார்.

இது கவிஞர்களை ஊக்கப்படுத்தவும் அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கவுமே தொகுக்கப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொள்ள ஒத்துழைப்பு நல்கிய நண்பர்கள் திருமிகு சித்தார்த் பாண்டியன் உள்ளிட்ட அனைவருக்கும் இனிய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இதனை புத்தகமாக வெளியிட பொருளுதவி செய்து உதவிய அண்ணாமலை பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் க முருகன் அவர்களுக்குமன்றத்தின்சார்பாகஇதயங்கனிந்தநன்றியைஉரித்தாக்குகிறேன்.

இராம வேல்முருகன்
நிறுவுநர் மற்றும் செயலாளர்
தஞ்சைத்தமிழ்மன்றம்

# வாழ்த்துரை

வணக்கம்

தஞ்சைத்தமிழ் மன்றம் என்ற ஒரு அமைப்பு கவிஞர்கள் எழுதிய கவிதைகளைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடுவதைக் கண்டு அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன். ஒரு வருடம் ஆனதே தெரியாமல் விரைந்து சென்றதை நினைத்து ஆச்சரியப்படுகிறேன். சென்ற ஆண்டு போலவே இவ்வாண்டும் கவியரங்கக்கவிதைகளைத் தொகுத்து நூலாக்கி வெளியிடும் பணியில் எனக்கும் வாய்ப்பளித்ததற்கு தஞ்சைத்தமிழ்மன்றச் செயலாளர் நண்பர் திரு இராம .வேல்முருகன் அவர்களுக்கும் தஞ்சைத்தமிழ் மன்றத்திற்கும் நன்றி கூறுவதோடு இம்மன்றம் தமிழ்ப் பணியில் தமிழ்க்கவிஞர்களை வளர்க்கும் பணியில் தம்மை ஈடுபடுத்தி மென்மேலும் வளர உளமார வாழ்த்துகிறேன்.

வாழ்க தமிழ்

முனைவர் க.முருகன்
பேராசிரியர்
(அண்ணாமலை பல்கலைக்கழகம் )
நெய்வேலி
30.07.2019

# வாழ்த்துரை

பூங்கொத்தாய் மலர்ந்திருக்கும் புதுமைப் பூக்கள்
புதுவிடியல் தனையுரைக்கும் பொன்னின் பூக்கள்
மங்களமாய்த் தமிழேந்தி மலர்ந்தக் கூட்டம்
மகளிரெனும் மகாசக்தி மாண்பின் ஈட்டம்
சங்கமாகத் தஞ்சைநகர் சார்ந்த மன்றம்
சரித்திரத்தில் சங்கமிக்கும் சக்தி யென்றும்
தங்குதடை ஏதுமின்றி தரணி போற்றும்
தமிழேந்தி வளர்ந்திடவே வாழ்த்து மேற்றே.

கவிமாமணி வீரபாண்டியன் தென்னவன்,
மதுரை.

# வாழ்த்துரை

எழுத்துக்களின் கோர்வை சொல்லாகிறது.சொற்களின் கோர்வை உயிரோட்டமான உரைநடையாகிறது. இலக்கண விதிகளுக்கு உட்படும் போது கவிதையாகிறது. கவிஞர்களின் பல கவிதைகள் ஒன்றாகும்போது கவிதைப் பூங்கொத்தாகிறது. அவ்வகையில் கோர்க்கப்பட்ட இக்கவிதை நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் தமிழ் மணம் கமழ்கிறது. மகளிரெனும் மாபெரும் சக்தி, வள்ளுவரின் நெறிகள், மரபு வகைப் பாக்களிலும் கவிஞர்களின் கவித்திறன் மிளிர்கிறது. தொகுத்து நூலாக்கியுள்ள இளவல் இராம. வேல்முருகன் அவர்களை மனமகிழ்வுடன் பாராட்டுகிறேன். மென்மேலும் தஞ்சைத் தமிழ் மன்றம் சீரும் சிறப்புமாக வளர அனைவரின் ஒத்துழைப்பையும் அன்புடன் வேண்டுகிறோம்.

கோவிந்தராசன் பாலு,
கும்பகோணம்.

# வாழ்த்துரை

பூவார் சோலை மயிலால புரிந்து குயில்களிசை பாட
காமர் மாலை அருகசைய நடந்தாய்வாழி காவேரி!
என்று இளங்கோவடிகள் பாடிய காவிரி தீரத்தில்,

சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே!
எனதேவாரம்பாடியதஞ்சைப்பகுதிவலங்கைமானில்தஞ்சைத் தமிழ்மன்றம் தன் முதலாம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவது மகிழத்தக்க ஒன்று.

என்இளவல் இராமவேல்முருகனின் வழிகாட்டுதலில் தமிழ்க் கவிதைகள் சிம்மாசனம் அமர்வது இனி தமிழுக்கு நல்ல காலம் என்பதனைக்காட்டுகிறது. வெறுமனே இலக்கியப்பணி மட்டுமன்றி இலக்கணவகைகளையும் பாக்களின் வகைகளையும் அதை எழுதுகின்ற அறிவையும் உட்புகுத்தித் தெளிவு படுத்தி இளங்கவிஞர்களை மெருகேற்றும் அருமையான பணிகளை மன்றம் செயல்படுத்துவது போற்றத்தக்கது.

ஐம்பெரும் குழுவும் எண்பேராயமும் அரசை வழிநடத்திய மண்ணில் ஒரு கவிப்பேராயமாக தஞ்சைத் தமிழ் மன்றம் தன் தமிழ்த்தொண்டை எல்லைகளற்று விரிவுபடுத்துவது கண்டு மனம் மகிழ்கிறது. இரசராசனின் வாள்வீச்சும் இராசேந்திரனின் வேல்வீச்சும் விளையாடிய நிலத்தில் கவிதையும் வாள்சுழற்றுகிறது. தஞ்சையின் நஞ்சைகள் நெல்விளைவிப்பதோடு இனி சொல்லையும் விளைவிக்கும் என்ற எண்ணம் சிறக்கிறது.

தெருவெங்கும்கவிமுழக்கும்தமிழ்மன்றத்தின்பணிகளில்இனி எம் கவிதாமண்டலமும் கைகோக்கும். தஞ்சைத்தமிழ்மன்றத்தின் ஒவ்வொரு செயல்பாடுகளும் உலகம் கண்டு வியக்கத்தக்க வண்ணம் வளர்க வாழ்க!

வாழ்த்துகளுடன்,
இரா. பொற்கைப்பாண்டியன்
நிறுவனர் - தலைவர்
பொற்கைப்பாண்டியன் கவிதா மண்டலம்,
மதுரை - 3.

# வாழ்த்துரை

தஞ்சைத்தரணியில் தமிழ் வளர்க்கும் அமைப்பாக வளர்ந்து வரும்தஞ்சைத்தமிழ்மன்றம்முதல்ஆண்டுவிழாவைகொண்டாடுகின்ற வேளையில், ஆண்டுவிழா தொகுப்பாக தமிழ்ப் பூங்கொத்து என்ற கவிதை நூல் வெளியீடு காண்கிறது.

நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகள் அந்நூலில் இடம் பெற்றுள்ளது மகிழ்வைத் தருகிறது. ஒரு கவிதையின் மூலம் சொல்ல வருகின்ற கருத்து படிப்பவர்களுக்கு மனதில் தைக்கிறதோ அதுவே சிறந்த கவிதையாக இருக்க முடியும். அதைத்தான் பல கவிஞர்களும் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த நூலில் பல தமிழ் ஆசான்களின் கவிதைகள் இந்த நூலுக்கு பெருமை சேர்க்கும் நாளைய இளம் கவிஞர்களுக்கு வலுச் சேர்க்கும். ஆண்டுவிழா சிறப்போடு நடைபெற என் மனமார்ந்த நல்வாழ்த்துகள். நிலாமுற்றம் என்ற கவிஞர்களின் குழுமத்தின் சார்பிலும் வாழ்த்துகள்.

அன்புடன்

முத்துப்பேட்டை மாறன்
பேட்டை - முத்துப்பேட்டை

# வாழ்த்துகிறேன்

அன்புக்குரிய தஞ்சை தமிழ்மன்ற சொந்தங்களே! ....

வாழ்க தமிழ்!
வளர்க தஞ்சை தமிழ் மன்றம்!!
வணக்கம் மிகுந்த மகிழ்ச்சி

எமது தமிழை ஈசன் முதல் ஆன்மீகக் குரவர்கள், புலவர்கள், அவர்களுக்கு உதவி புரிந்த வள்ளல்கள், மன்னர்கள் மற்றும் சங்க கால சங்கங்கள் இவை எல்லாம் எமது தமிழ் வாழ, வளர பல்வேறு வகைகளில் உதவியது, பணி செய்தது.

அந்தக்காலம் தற்போது இல்லை என்றாலும், இளமை குன்றாத முது மொழியாம், தேன் மொழியாம், அமுத மொழியாம், செம்மொழியாம் எமது தாயினும் மேலான தமிழ் மொழியை வளர்ப்பதில் பல்வேறு சங்கங்கள், மன்றங்கள், முகநூல் குழுமங்கள் போட்டி போட்டு செயல்பட்டு வருகிறது என்பது மகிழ்ச்சியே.

இதில் சில அமைப்புகள் சுயநலம் இல்லாமல் வணிக முறை இல்லாது நிலவு தளம் போல மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது.

தமிழனின் மானத்தை, கலையை, வீரத்தை, ஆன்மீகத்தை இன்று மட்டுமல்ல, நாளையும் உலகம் கூறும் வண்ணம் மாமன்னன் இராசராச சோழன் வாழ்ந்த, வளர்ந்த ஆண்ட , தஞ்சை பிரகதீசுவரர் கோவில் இறைவனாக ஆண்டு கொண்டு இருக்கின்ற, கோவில் நகரமான குடந்தையை உள்ளடக்கிய தஞ்சை மாவட்டத்தில், தமிழ் மணம் வீசும் சிறந்த மன்றம் தஞ்சை தமிழ் மன்றம்.

மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.இம்மன்றம் கவிஞர்களை, பல படைப்பாளர்களை உருவாக்கி உள்ளது, உருவாக்கி வருகிறது. முத்தமிழும் வளர பாடுபடும் தலைவர் பாசமிகு அண்ணா திரு. பாலூ கோவிந்த ராசனார், அவரின் பாசமிகு இளவல் எமது அண்ணா செயலாளர் திரு. இராம. வேல் முருகனார் மற்றும் தலைமைப் பொறுப்பாளர்கள், உறுதுணையாக இருக்கும் சான்றோர்கள், கவிஞர்கள் மன்றத்தின் தூண்கள் அனைவரையும் இந்த இரண்டாம் ஆண்டு விழா மலர் மூலம் பாராட்டி வணங்குகிறேன்.

என்றும் அன்புடன்
கருங்கல் கி.கண்ணன்
நிறுவனர் தமிழன்னை தமிழ்ச் சங்கம்

# வாழ்த்துகின்றேன்!

தமிழ்வளர்க்க தரணியிலே பல்லோருண்டு
தன்னலத்தை உள்ளிருத்தி தானும் செய்வார்
தமிழாலும் தன்னலத்தை வளர்த்த பல்லோர்
தமிழ்ப்பணியில் தனைத்தானே தனித்தே போவார்

ஓராண்டே ஆனதெங்கள் மன்றம் ஆயும்
ஓய்வின்றி தொய்வின்றி உயர்ந்த நோக்கில்
சீரோடும் சிறப்போடும் தமிழைப்பேணும்
சிறப்புதனை உரைப்பதற்கு வார்த்தையில்லை!

தஞ்சை தமிழ்மன்றம் தரணிதன்னில்
தனித்துவத்தை பெற்றதில் மிக்கப் பங்கு
துஞ்சாது செயலாற்றும் வேல்முருகனென்றால்
துளியும் மிகையில்லையதை அறிவார் யாரும்!

ஆண்டுவிழா கொண்டாடும் இந்த நாளில்
வேண்டுவன யான் இதுதான் இன்னும் இன்னும்
நீண்ட நெடுங்காலமிது நிலைத்து நின்று
நீள் புகழை யடைந்திடனும் வாழ்த்துகின்றேன்!

பொன்மணிதாசன்

# தஞ்சை மன்றம் கழலடியைப் போற்றிடுவோம்.

- எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் -

காவிரித்தாய் மடியெங்கள் தாய்வீ டாகும்.
கழனிவயல் பொங்குமது சேய்வீ டாகும்.
பூவிரிந்த தைப்போலப் பொன்னாள் வாழும்
பொற்புடைய தஞ்சையிலே எங்கள் மன்றம்.
கூவியழை யாப்போதும் வருகை செய்ய
கோபுரமாய்க் கவிகுலத்தார் சேர்ந்த மன்றம்.
தேவியெனை ஆளுகின்ற மீனாட் சிக்குத்
சிரம்தாழ்த்தி வணக்கம்செய் கின்றேன் நாளும்.

தமிழுக்குத் தொண்டுசெய்யும் தஞ்சை மன்றம்.
தமிழார்வம் கொண்டவர்கள் இங்கே தஞ்சம்.
அமைகின்ற அத்தனையும் சத்தி யங்கள்.
அதுதானே இங்கிருக்கும் அதிச யங்கள்.
உமியல்ல இங்கிருப்போர் உத்த மர்கள்
உலகாளும் தமிழ்மகளின் புத்தி ரர்கள்.
நமையாளும் தமிழுக்கென் வந்த னங்கள்.
நம்தஞ்சை தமிழ்மன்றம் ஓங்கி வாழ்க.

வேலவனின் அருளுண்டு வேலும் உண்டு.
வெல்லுகின்ற வேல்நிகர்த்தச் சொற்க ளுண்டு.
பாலகனாம் கோவிந்த ராஜன் இங்கே
பக்கத்தில் இருக்கின்ற கோலம் கண்டு
சீலர்கள் கவிவடிக்கும் காட்சி உண்டு.
சீர்மரபில் பாவடிக்கும் நானு முண்டு.
காலத்தை வெல்லுமெங்கள் தஞ்சை மன்றம்
கழலடியைப் போற்றிடுவோம் வாழ்க என்றும்.

"அகன்" @ அனுராதா கட்டபொம்மன்

# வாழ்க தஞ்சைத் தமிழ் மன்றம்

தமிழ்தாயே உனைப்போற்றி கவி பாடிடுவேன்...!
தங்கத்தமிழ் மலரே நீ கவிசொல்லி ஆடிடுவேன்...!
தண்டமிழே உன் புகழ் மணக்க பலபுகழை கூறிடுவேன்
யார்யாரோ புகழ்பாடிஅன்னையே  உனை பாடினாலும்...!
அடியேனும் பாடுவதில் என் புகழ் உயருமே...!

எத்தனை  புலவர்கள் உனைவாழ்த்திப்  பாடக் கேட்டாலும்
அத்தனையும் எண்ணியே அடியேனும் வினவுகிறேன்...!
முத்துத்தமிழ் நீஎனக்கு மொட்டுமலர் தானெக்கு..!
முத்தமிழாய் காப்பியங்கள்...! முழுமைபெற்ற சாத்திரங்கள்...!
நீதிநெறி விளக்கமானாய். நீள்புகழில் அடக்கமானாய்!

நீயில்லா இடமில்லை!நீள்வானமே எல்லை!
பூங்குயில்களும் சோலைகளும் பைந்தமிழில் பாடுது
பறவைகளும் மயங்கிடுதே காற்றிலிசை
மீட்டுகின்ற கலைஞானம் கூடுதே...
தேமதுரத் தமிழோசைதேனினிய கவியோசை!

தேன்தமிழின் குரலோசை தெள்ளுதமிழ் குறளோசை!
எண்ணஎண்ண இனிக்குதம்மா என்தமிழே பிறக்குதம்மா!
என்தாயே திருக்குறளாய்...  எண்திசையும் நீயானாய்!
பத்துப்பாட்டு பைந்தமிழே! பாமணக்கும் பிள்ளைத்தமிழே...!
பாரதியும் பாவேந்தரும் பாடிவைத்த புதுத்தமிழே...!

அன்னைமொழி நீயானாய்....! அமுதமொழி சேயானாய்...!
அறிவுமொழி நீயானாய்...! அருந்தமிழே...! வாழியநீ...!
சோழ வம்சத்தின் சோர்வில்லா தஞ்சையிலே
கற்கண்டு சுவையோடு கவிஇசைக்க வந்தேனே
தஞ்சை தமிழ் மன்றம் தமிழ்க்கு மறு குன்றாம்

நெஞ்சம் மகிழ்வு தரும் படைப்புகள் பல உண்டாம்
நஞ்சை கொஞ்சுகின்ற    நலமிகு ஊராம்
நானிலம் போற்றுகின்ற   திருவாரூர் தேராம்
கொஞ்சிடும் தமிழினிலே   குவிந்திடும் புகழினை
கொண்ட தமிழ் வையமே
வென்ற தஞ்சை தமிழ் மன்றமே ...!

மனுநீதி சோழனின் மண்ணில்
உதித்த மகத்துவ மன்றம்
மாபெரும் கவிஞர் உருவெடுத்த
சரித்திர மன்றம்...!
மேவிடும் புகழினை படைத்திடும்
தமிழ்கவிகள் நடத்திடும் மன்றம்...!
உயர்கலை செழிக்கும் தஞ்சை கோபுரம்
உயரும் மன்றம்...!
இளந்தமிழர் செம்மைக்குஇயம்பிடும்
கவிஞர்கள் வளர்த்திடும் மன்றம்...!

ஆழ்நெஞ்சில் தமிழுணர்வை
வளர்த்திடும் மன்றம்...!
அகிலத்தில் தமிழை
உயர்த்திடும் மன்றம்...!
மேவிடும் வள்ளுவம்
உயர்த்திடும் மேன்மை காத்திடும் மன்றம்...
தமிழ்ப் பகை விரட்டி
"மொழி" காத்திடும் மன்றம்
தரணியுள்ளோர் வியந்திடும்
தஞ்சை தமிழ் மன்றம்

வாழிய தஞ்சை தமிழ் மன்றம்...

கவிஞர் ஆர். இளஞ்செழியன்

# தோள்கள் ஏறும் பல்லக்கு!

தித்தித் திருக்கும் செம்மொழியே
திருவாய் அமுதே நல்வணக்கம்!
வித்திட் டிருக்கும் மனத்தோட்ட
வெளிச்சக் கனியாய்ச் சொல்லினிக்கும்!
குத்திட் டிருக்கும் கூர்தமிழ்வேல்
குளிர்கை ஏந்தும் தமிழ்மன்றம்!
முத்திட் திருக்கும் தஞ்சையினில்
முதலே உன்றன் புகழ்மணக்கும்!

பூந்தேன் சொட்டப் பாவடிக்கும்
மரபு வேந்தன் வேல்முருகன்
நீந்தும் யாப்பு மாக்கடல்கோ
விந்த ராசன் மலையரசன்
தாள்கள் நான்கும் தமிழுக்காய்
நாடு முழுதும் சுற்றிவரும்!
தோள்கள் ஏந்தும் பல்லக்கு
துலங்கும் தஞ்சைத் தமிழ்மன்றம்!

திங்கள் தோறும் கவியரங்கம்
செவிகள் இனிக்க விருந்தளிக்கும்!
துங்கா மாமணித் தமிழ்மன்றம்
தொடரும் கவிஞர் நட்பிசைக்கும்!
தஞ்சைத் தமிழ்மா மன்றமிதன்
தலைநாள் விழாவாம் முதலாண்டில்
செஞ்சொல் வேந்தர் பலர்கூட்டித்
தீட்டும் சாதனை அதுபடைக்கும்!

திருக்குவளை கவிமாமணி வெற்றிப்பேரொளி

# தஞ்சை தமிழ்மன்றம்

பல்லவி :
தஞ்சை தமிழ்மன்றம் கூறாதோ நல்வரவு
தஞ்சம் கொண்டாலே வாராதோ நல் உறவு
பூங்குயில் பாடிடும் பாட்டு
மயில்போல நீ ஆடு
அழகோவியம் உந்தன் கவிதைகள்
பலக்காவியம் அதன் விதைகளில்

சரணம் : 1
மன்றத்தை பொறுப்புடன் பொலிவுடன் நடத்திடும்
பொறுளாளர் தானே நம் வாஞ்சிலிங்கம்
தலைமையை ஏற்றிங்கு தலைக்கனம் இன்றியே
தழைத்தோங்கும் கோவிந்தரா ஜனையா
பாரும் போற்றுமிங்கு ஊரும் வாழ்த்துமெங்கும்
செயலாளர் தானே நம் வேலு ஐயா
கவிதைகள் பிறந்திடுமே..நம்
கனவுகள் சிறந்திடுமே
நீ வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் சோர்ந்தாலும்
தமிழ்மன்றம் உனை தேற்றுமே
தஞ்சை தமிமன்றம் உனைதேற்றுமே

சரணம் : 2
இதயங்கள் மலர்ந்திட உதயங்கள் பிறந்திட
நாதங்கள் மீட்டிட நீயல்லவா
புஞ்சையும் நஞ்சையும் பஞ்சங்களில்லாத
தஞ்சைதமிழ்மன்றம் தாயல்லவா
பகலும் இரவு மில்லை. புகழும் உலகின் எல்லை
பூத்தாடும் பூமுல்லை தேனல்லவா
நெஞ்சமெல்லாம் புகழ்ந்திடவே
தமிழ் தஞ்சைமன்றம் திகழந்திடுதே
மனம் மணம்வீசி தினம் வாழ கணம்பாடி மனதார/
ஊலமுள வாழ்த்திடுமே உங்கள்
ஊலமுள வாழ்த்திடுதே
.

இசைக்கவி... பிரபு வாய்ஸ்

# தஞ்சை தமிழ்மன்றம்

ஏ கொட்டு கொட்டு மேளங் கொட்டு
கும்பகோணம் நகரதிர
மட்டில்லா மகிழ்வோட ஆடு
அட தட்டு தட்டு கையத் தட்டு
தஞ்சைத் தமிழ் மன்றம் வளர
தன்மான உணர்வோடப் பாடு ...
ஏ எட்டுத்தொகை திக்குங் கேட்க வேணும்
இந்த சத்தம் ...
எல்லாருமே வாழ்த்த வேணும்
நித்தம் நித்தம் ..
தஞ்சைத் தமிழ் மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம் ... ( தஞ்சைத் )

சரணம் 1 ..

எத்தனையோ கவிஞர்களைஎளிதாக அடையாளம்
காட்டியவோர் வளமான சங்கம்
எந்நாளும் மறவாத இனிதான விருதுகளைத்
தந்ததொரு தரமான சங்கம்
ஏ இந்தப் பக்கம் அந்தப் பக்கம்
எந்தப் பக்கம் பார்த்தாலும்
வியாபார நோக்குடனே சங்கம்
ஏ அந்த நாளும் இந்த நாளும்
எந்த நாளு ஆனாலும்
தமிழ் காக்கும் தஞ்சைத் தமிழ் மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம் .. ( ஏ கொட்டு )

சரணம் 2 ...

பழகுதற்கு இனியவராம்பண்பாளர் வேல்முருகன்
உழைப்பினிலே வளருகின்ற மன்றம்
பாசமுடன் எல்லோரை அரவணைக்கும் அன்புடைய
பாலு அவர் வளர்த்தெடுக்கும் மன்றம்

ஏ இன்பத் தமிழ் எங்கள் தமிழ்
இனிதாகப் பொலிவுறவே
எல்லாமுஞ் செய்யுமிந்த மன்றம்
ஏ எங்கிருக்கும் கவிஞரையும்
இங்கழைத்து வந்து பெரும்
இதமாகக் கௌரவிக்கும் மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம் ( ஏ கொட்டு )

இயக்குநர் சிவா. ஜி

# ‘தஞ்சைத் தமிழ் மன்றம்’

தஞ்சைத் தமிழ் மன்றம்
தரணியிலே ஒரு மன்றம்
லஞ்சம் வஞ்சம் இல்லா அழகியத் தமிழ் மன்றம்
அழகியத் தமிழ் மன்றம்

முகநூல் குழுமத்திலே முந்தி வரும் நாளை எண்ணி
முகநூல் குழுமத்திலே முந்தி வரும் நாளை எண்ணி
முத்தானக் கவிஞர்களை சொத்தாகக்கொண்ட மன்றம்
முத்தானக் கவிஞர்களை சொத்தாகக்கொண்ட மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம்
தரணியிலே ஒரு மன்றம்...

சிங்காரத் தஞ்சையிலே ஒய்யாரநடை போடும்
சிங்கார தஞ்சையிலே ஒய்யாரநடை போடும்
தேன் தமிழ் புலவரெல்லாம் தேடிவரும் இனிய மன்றம்
தேன் தமிழ் புலவரெல்லாம் தேடிவரும் இனிய மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம்
தரணியிலே ஒரு மன்றம்...

வான்புகழ் வள்ளுவனை வணங்கிடும் எங்கள் மன்றம்
வான்புகழ் வள்ளுவனை வணங்கிடும் எங்கள் மன்றம்
வாஞ்சையோடு யாவரையும் வரவேற்கும் எங்கள் மன்றம்
வாஞ்சையோடு யாவரையும் வரவேற்கும் எங்கள் மன்றம்
தஞ்சைத் தமிழ் மன்றம்
தரணியிலே ஒரு மன்றம்
லஞ்சம் வஞ்சம் இல்லா
லஞ்சம் வஞ்சம் இல்லா அழகியத் தமிழ் மன்றம்
அழகியத் தமிழ் மன்றம்

இசைக்கவி பி. மதியழகன்

# தமிழ் மன்றம் தஞ்சை மன்றம்.

சிட்டு சிட்டு பறக்கும் சிட்டு
சீரான வடிவம் தொட்டு
பட்டு பட்டு மலரும் இந்த மன்றம்.

பாமரரை விழிக்க வைத்து
பலகாலம் நிலைக்க வைத்து
பாவடியைக் கற்க தூண்டும் மன்றம்

எட்டுத் திக்கும் தமிழ் மணக்கும்
இயல்பாக தமிழ் வளர்க்கும்
சொட்டு மெட்டு மாந்தர்களைக் கொண்டு

பாலு ஐயா வேல் ஐயா
பல்லோர் கூட்டு முயற்சியாலே
விரைந்த வளர்க்கும் தஞ்சை தமிழ் மன்றம்.

சுரக்கும் தமிழ் சிறக்க இங்கு
பறக்க வைக்கும் எண்ணத்துடன்
பாடு பட்டு வளர்க்கும் இந்த மன்றம்.

திரைக்கும் பின்னே பலரிருக்க
வளர்க்கும் தமிழ் முழக்கத்துடன்
சிறக்க சிறக்க வளரும் இந்த மன்றம்

தமிழ் மன்றம் தஞ்சை மன்றம்.

நெருப்புக்கவிஞர் வீரா
தஞ்சாவூர்

# வாழியவே

நீலக் குயிலிடத்தில் நித்தநித்தம் இசைபடித்துச்
சீலத் திருப்பதித்துச் செம்மாந்த திருநாட்டில்
ஆழத் தேர்ப்பிடித்து அகன்றெடுத்த வயல்களெல்லாம்
வாழத் தமிழ்க்கதிரை வளர்த்தெடுக்கும் பேரமைப்மைப்பாய்

பேணி வைத்ததோரு பெருஞ்சீராம் தமிழ்ப்புதையால்
வாணி யாழ்ப்பிறந்து வளர்ந்திசைத்து களிபெருக்கி
தேனில் இட்டதொரு தேமாவாய் சொற்புலவர்
பாணி செய்வதற்கு பாதையிட்டுத் தருமமைப்பாய்

செழித்த பெண்ணொருத்தி செவ்விடையின் மேலெழும்பிக்
கொழித்துப் பால்சுரக்கும் கொங்கையெனத் தான்நிரம்பி
குழித்தேன் குவிமலரில் குளித்தெழுந்த வண்டினைப்போல்
பிழித்தே தமிழ்வழங்கி பீடுடைத்த பெருமமைப்பாய்

நெஞ்சில் ஓராண்டு நிறைந்துவிட்ட தமிழ்ச்சுவடாய்
விஞ்சும் சோழர்குல விண்ணகராய்க் கற்றளியாய்
கொஞ்சும் தமிழ்வளர்த்து குலப்பெருமை காத்துவரும்
தஞ்சைத் தமிழ்மன்றம் தான்வாழி வாழியவே

ஊழி பலகடந்தும் உயிர்த்திருக்கும் திருக்குறட்போல்
ஆழித் திரைகடலில் ஆர்ப்பரித்து எழும்அலைபோல்
வீழில் இமயமுடி வீற்றதொரு விளக்கொளிபோல்
வாழி தஞ்சைநகர் வளர்தமிழர் மன்றமதே

அன்புத்தமிழன்
சித்தார்த்தபாண்டியன்,
மதுரை

# என்வாழ்வின் பேருண்மை

ஈரைந்து மாதங்கள் தான்சுமந்து
என்னையும் எந்தாய் ஈன்றெடுத்தாள்
பார்வந்தப் பின்தான் கண்திறந்தேன்
பகலிர வென்பதைப் புரிந்துக் கொண்டேன்
நீர்நிலம் நெறுப்பென பகுத்துணர்ந்தேன்
நிலவி னெழில்தனை இரசித்திருந்தேன்
ஊருலகம் மொன்று இருப்பதையும்
உணர்ந்தே வாழ்வைத் துவங்குகிறேன்!

அன்னையை அன்புடன் தாயென்றேன்
அவளின் துணைவனைத் தந்தையென்றேன்
முன்னைப் பிறந்தவனை அண்ணனென்றேன்
பின்னைப் பிறந்தவளைத் தங்கையென்றேன்
இன்னும் இப்படி யாரையும்நான்
ஒவ்வொருப் பெயரால் அழைத்துவந்தேன்
விண்ணையும் மண்ணையும் இணைக்கின்ற
விண்மழை போல்நம் முறவென்பேன்!

இரவும் பகலும் மாறிவரும்
இயற்கை இதுதான் அதுபோல
உறவும் பிரிவும் சேர்ந்துவரும்
உலகின் நியதி மாறாது
அரவுக்கு கீரி எதிரியென்றால்
அறிவுக்குக் கல்வி நட்பாகும்
இரவும் பகலும் நாளென்றால்
இன்பமும் துன்பமும் வாழ்வாகும்!

எவர்க்கும் எதையும் சொல்வதுவே
எளிதா யிருக்கும் ஆனாலும்
அவரவர் கருத்தில் மெய்கருத்தினையே
அறித லன்றோ அறிவுடமை?
உவர்க்கும் கடலிலும் உயர்முத்து
உண் டென்பதுவே மெய்கருத்து
சுவர்க்கும் எழில்தரும் சித்திரமே
சொல்லுக்கும் அழகு நற்கருத்தே!

உயர்வுக்கும் தாழ்வுக்கும் போராட்டம்
உலகிற் கிதுவோர் புதுமையல்ல
அயர்வுக்கும் முயற்சிக்கும் போராட்டம்
அதில்தான் நற்செயல் உருவாகும்
வயலுடன் உழவனுக்குப் போராட்டம்
இதுவே தமிழுக்குப் பொற்காலம்!

மதுவும் மாதுவும் போதையென்பர்
மதுரத் தமிழும் போதைத்தரும்
அதுவும் கவிதையில் மிகபோதை
அருந்த அருந்த மிகவாகும்
எதுவும் அளவில் சுவையாகும்
இதம் இங்கிதமே யதுவாகும்
இதுவே யான்கண்ட பேருண்மை
இதை மறுப்பவர் யாரினிமேலே?

தமிழ்நெஞ்சம் அமின்
பிரான்சு

# மகளிரெனும் மாபெரும் சக்தி

பெண்களாகப் பிறந்துவிட்டால் சாபக் கேடா!
பெண்ணினமும் வலிகளினைத் தாங்கும் கேடா!
கண்களெனப் பெண்களையும் மதிப்போர் இல்லை.
காளையர்க்கே அடிமையாக ஆக்கல் நன்றா!
மண்ணுலகில் சுமைதாங்கும் பெண்கள் என்றும்
மாசற்ற மாதாவே உணர்வீர் நீங்கள்.
திண்ணமாகச் சொல்லுகின்றேன் சுமையும் தாங்கும்
திறமையினைப் போற்றிடுங்கள் நாளும் இங்கே!!

உண்மையினைச் சொல்லுவதால் தயக்கம் இல்லை
உயிர்ப்பாலாய் உதிரத்தைத் தந்த தெய்வம்.
கண்களிலே கண்ணீரும் பெருக்கெ டுத்தால்
காசினியும் சிறந்திடுமா நீரே சொல்வீர்.
விண்ணுலகம் செல்லுகின்ற வரைக்கும் பெண்கள்
விடியலினைக் காணுதற்கு வாய்ப்பே இல்லை.
எண்ணங்கள் சரிதானா சிந்திப் பீர்கள்.
ஏற்றங்கள் பெண்மைக்கு வேண்டும் வேண்டும்!!

வாழ்த்துகளை மகளிர்க்குச் சொல்லு கின்றேன்
வரமாக ஆண்டவனின் பிறப்பே யன்றோ .
ஆழ்மனத்தில் தம்சுற்றம் தன்னை எண்ணி
அயராது பேணுகின்ற தாயாய் நிற்பாள் .
மூழ்கிடுவர் சமுதாய நலத்தை எண்ணி
முனைந்திடுவர் உயர்வான கொள்கை கொண்டே .
தாழ்ந்திடுவர் அன்பான உறவைக் காக்க.
தன்மானம் மாறாது பயணம் செய்வர் !!!

சரஸ்வதி பாஸ்கரன்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - அன்னை

அன்னை என்றால் அளவற்ற அன்பு;
தன்னை மறந்த தியாக உள்ளம்;
உன்னை உருவாய் உலகுக் களித்தவள்;
முன்னை வினைகள் முழுதும் தீர்ப்பவள்.

ஏழ்கடல் தாண்டி எங்கோ யிருப்பினும்,
பாழ்மனந் தாங்காது பசித்தே யிருப்பவள்;
ஆழ்கடல் எழினும் அமிழ்ந்து போகாது,
சூழ்துயர் வாராது சுகமாய்க் காப்பவள்.

உள்ளத்து அன்பினை உரிமையாய்க் காட்டி,
வெள்ளத்துப் பெருக்காய் வெண்மை மனத்தோடு,
தெள்ளுற்ற தமிழாய் அள்ளி யணைத்தே,
பள்ளத்தே வீழாது பரிவாய்க் காப்பவள்.

ஆத்திரங் கொள்ளாது அறிவாய் வளர்த்து,
சாத்திர மனைத்தும் செறிவாய் ஊட்டி,
சூத்திரம் யாவையும் சுருங்கக் கூறியே,
நேத்திரங் கெடாது நியதியாய் வளர்ப்பவள்.

உருவாய் அமைந்த உலகத்து உயிர்களுள்
கருவாய் சுமந்திட்ட கலியுகத்துக் கடவுளிவள்;
அருவாய் மாறினும் அருகிருக்கும் அன்னைக்கு
தருவாய் என்றும் தக்கதான தகுதியினை.

கண்ணகத் துள்ளே காத்து வளர்த்து,
விண்ணகந் தாண்டிய உயரந் தொட்டிட,
எண்ணகந் தனிலே ஏற்றம் பெறவே,
மண்ணகத்து வாழும் மனிதரில் தெய்வமே!!!

ராணி லட்சுமி

# மகளிரெனும் மாபெரும் சக்தி - அன்னை

கடவுளை கண்டதில்ல... ஆன...
நான் கண்ட தெய்வம் எனை பெத்த அம்மா தாங்க...
பத்து மாதம் எப்படி தான் இடுப்புல சுமந்தாளோ..
புரட்டு படுக்க முடியாம எப்படியெல்லாம் தவித்தாளோ..

இடுப்பு வலி எடுக்க எப்படி தான் சுருண்டாளோ..
அவள் தேகம் கிழித்து வர எப்படி தான் பொறுத்தாளோ..
அள்ளி எனை எடுத்து வலியணைத்தும் மறந்தாளோ..
பால் இழுத்து நான் சுவைக்க கோடி இன்பம் கொண்டாளோ..

பிடித்ததெல்லாம் ஒதுக்கி வைத்து பத்தியமா உண்டாளோ..
என் பசி நீக்கிடவே இரவெல்லாம் விழித்தாளோ..
எட்டடி எடுத்துவைத்து எட்டுத்திசை நான் ஓடயில..
மூச்சு வாங்க ஓடி வந்தும், நீ முகம் சுழிச்சு பார்த்ததில்ல...

அன்னமிட்ட உனை மிஞ்ச உலகத்துல யாருமில்ல
அன்புனு வந்துட்ட உனக்கு மட்டும் எல்லையில்ல..
சின்னதொரு இடைவெளியும் ஒ மனசு பொறுத்ததில்ல
எனக்குனு எத கேட்டாலும் மறப்பேதும் சொன்னதில்ல

உனக்குனு நா எத செஞ்சேன்..
இதுவரைக்கும் உனக்குனு நா எத செஞ்சேன்
ஒண்ணு தான் நா செஞ்சேன்..
அம்மானு தா கூப்பிட்டேன்..
அம்மானு தா கூப்பிட்டேன்

அந்த ஒத்த வார்த்தைக்காக இமைக்குள்ள வச்ச பார்த்தாயே...
உன் மொத்த வாழ்க்கையும் எனக்காகவே வாழ்ந்தாயே...
அம்மா.. உனை மிஞ்ச, இந்த உலகத்துல யாருமில்ல...
உனைப்பத்தி எழுத வார்த்தையும் போதவில்ல...
எனக்கு தமிழ் வார்த்தைகளும் போதவில்ல..

அ. செல்லா மாரிமுத்து

# மகளிரெனும் மாபெரும் சக்தி - அன்னை

ஆணென்றால் வீரம் பெண்ணென்றால் மென்மை
அகராதியில் பொறிக்கப்படாத அர்த்தங்கள் இவைகள்
ஆணின் வீரமும் தோற்றுத்தான் போகிறது
பெண்ணின் பிரசவ வலிக்கு முன்னே

நரம்புகள் புடைத்திட அங்கமெல்லாம் சிலிர்த்திட
பனிக்குடமுடைந்து குருதியாறு வெள்ளமென பெருக்கெடுத்திட
ஊனுடம்பை உந்தித் தள்ளுபவள் அன்னை
ஆலயக் கருவறைக் கடவுளும் செயற்கையே

அன்னையின் கருவறைக் குழந்தைக்கு முன்னே
உள்ளத்தில் அன்பெனும் விதை விதைத்து
உதிரத்தை உரமாகத் தந்து வளர்த்திடுவாளே
விடியலுக்கு முன் விழித்திடும் இவள்

ஒருநாளும் உறங்குவதில்லை ஊரடங்கும் முன்
இல்லறம் சிறக்க இயந்திரமாய் இயங்குமிவள்
உறவுகளுக்கு ஒன்றென்றால் உலோகமாய் உருகிடுவாள்
தானென்ற அகந்தைத் துளியும் இல்லாதவள்

தனக்கென்று எதுவும் கேட்டிடாத புனிதமிவள்
காலமாற்றங்கள் சின்னச்சின்ன ஓய்வுக் கொடுத்திடினும்
அறநெறி மாறாது பணிசெய்துக் கிடப்பவள்
தாலாட்டி சீராட்டி வளர்த்த பிள்ளைகள்

எட்டி உதைத்து அநாதை ஆக்கிடினும்
பிள்ளைகள் நலனுக்காய் நாளும் பிரார்த்திபவள்
அவளின்றி நாமில்லை நாளும் வணங்கிடுவோமே
நலமாய் வாழ்ந்திட வேண்டும்மமா நீயென

தி. இராஜபிரபா
தேனி

# மகளிரெனும் மாபெரும் சக்தி - அன்னை

உதிரம் இழந்து உயிரைத் தருவாள்
கதியாய் மகவு ,கனிவாய்த் தகைவாள்
நதியாய் அலையாய் நலமாய்க் காப்பாள்
உளத்தில் ஒளித்தே உணர்.

உணர்வில் உனையே, உறைந்தே யிருப்பாள்
மணக்கும் மலராய் மனையை நிறைப்பாள்
பணத்தை நினைத்துப் பழகும் உலகில்
குணத்தால் அவளே குவை.

குவையின் உருவாய்க் குலையா நிலையாம்
அவையில் மகனின் அருமைப் பகன்று
சுவைக்கும் பதங்கள் சுயம்பாய்த் திகழும்
இவையாம் உயிரில் இடு.

இடுக்கண் வருங்கால் இருக்கும் அணைப்பாய்
தடுக்கும் கரங்கள் தடைகள் உடைக்கும்
எடுக்கும் முயற்சி எதிலும் துணிவாய்
கொடுக்கும் உறுதி கொள்.

வறிய நிலையில் வளமே தருவாள்
அறியாத் தவறும் அகற்றி அணைப்பாள்
முறியா உறவின் முடிவும் அவளாம்
எறிய முடியா ஏணி.

உணவுக்  கிடைக்கா உறங்கும் இரவில்
மணக்கும் அவளின் மறைக்கா உருக்கம்
கணக்குத் தவிர்த்தக் கவியாம் உயிராய்
இணக்கம் இருத்து இறை .

ஆ. நடராஜன்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - அன்னை

கருவறையில் பத்துத் திங்கள் இடமளித்து
கருணைக் கடலாய் அன்பைத் தந்து
பொத்தி சுமந்து என்னை பெற்றெடுத்த அம்மா
போதுமா இச்சென்மம் பாசம் காட்டிட அம்மா

உதிரம் தந்து உருவமாக்கி உயிரோடு உயிராக
உறவென்னும் பந்தத்தை பாசத்தால் அமைத்தாயம்மா
உலகமே நானென்று உயர்வு தந்து
உயிரைக்கூட என்பிறப்பால் விட்டுத்தர துணிந்தாயம்மா

சத்தியத்தின் வடிவமும் சகலமும் நீ
சாதித்துவெல்வதில் சரித்திரமும் நீ
புத்தியைத்தருகின்ற போதி மரமும் நீ
புன்னகையால் பொன்நகை பூட்டுவதும் நீ

உலகத்தில் உறவுகளை எனக்குக் காட்டி
உணர்வுகளை பாசமுடன் தினமும் எனக்கு ஊட்டி
உயர்ந்திட உயர்வினை வாழ்வில் அளித்தாயம்மா
உலகமே எனக்கு என்றும் நீதானம்மா

முகம் பார்த்து அன்னம் இடுவாய்
விழிபார்த்து வழியும் சொல்வாய்
கண் இமைக்குள் கண்ணாய் காத்து
கலக்கமே வாராது என்னைத் தேற்றுவாய்

நிலையற்ற இவ்வுடல் அழிவுற்றுப் போனாலும்
நினைவை விட்டு நீங்காய் அம்மா
உறவின் புனிதம் நீயே அம்மா
உயிரை உருவாக்கும் பிரம்மனும் அம்மா

தியாகத்தின் உருவம் அம்மா
உயிர்கள் போற்றும் உறவும் அம்மா..

வா. சண்முகம்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - அன்னை

எங்கும் நிறைந்தவள் எனக்குள் உறைந்தவள்
என் உள்ளத்தில் என்றும் உவட்டாது இனிப்பவள்
எனக்கு எவரும் வேண்டா  இவ்வயதிலும்
அன்னை மட்டும் அருகில் இருந்தாலே போதும்
என்றே கூறும் என்  மனது ஏக்கமுடன்

ஊர் சுற்றக்கிளம்பவே எவருடனும் செல்லவே விரும்பேன்
அன்னை மட்டும் போதுமே என்னருகில்
பார்த்து பார்த்து வாங்குவார் பாசம் கொண்டே
பத்துப்புடவைகள் கூட வருமே பிறந்த தினத்தில்
வீட்டிலவர் இருந்தாலே படுத்த இடம் விட்டு நகரேனே
பக்கத்தில் வருமே சுவையான உணவுகள் மணக்க மணக்கவே
உடலுக்கு எதேனும் வந்தாலோ
துடித்தே உடன்மருந்துகள் தருவார் குணமாகிடுமே

இருப்பதோ ஓர் அம்மா எவரிடத்தில் இருப்பது?
எனக்கு தான் நீ என்றிடும் என்மனது இன்னும் கொஞ்சம் நாள்
இருந்தால்தான் என்ன? ஏங்கும் மனது... சட்டென்று வந்து
நிற்பார்
துள்ளிக்குதிப்பேன் சிறுபிள்ளையென

தனக்கென எதையும் கொள்ளார் தள்ளாதிருப்பினும் அஞ்சார்
தன் குழந்தைகளுக்குச் சேவகம் செய்யவே

கொஞ்சும் அவரின் கவியழகு காண்போரை வியப்பிலாழ்த்தும்
எனக்கோ நாணம் மேலிடும் இவரின் திறம் இந்தக்கடவுள்
நமக்குப்படைத்தான் இல்லையே என்றே ஏங்கும்

என்ன இன்று இப்படி மனம் தித்திக்கிறது
ஓ ஞாயிறு அம்மாவின் வருகை... எங்கள் வீட்டில்...

தென்றல் கவி,
பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.

# மகளிரெனும் மாபெரும் சக்தி - அன்னை

அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்
சிலையின்றி கோவிலுண்டோ அன்னையின்றி ஒரு
குடும்பம் உண்டோ தாயே அனைத்திற்கும் தலை
தலையின்றி உடல் இயங்குமோ தாயே
ஒரு இல்லத்தின் தலைமகள்

தன்னுயிர் உடல் உடைமை அனைத்தும்
கொடுத்து அனைவரையும் அன்பால் அரவணைத்து
கண்டிக்க வேண்டிய நிலையில் கண்டித்து
ஆசானாய் மந்திரியாய் நிதி அமைச்சராய் அஷ்டவதானியாய்
அசராமல் வலம் வருபவள் தாயே

தன் உதிரத்தைப் பாலாக்கித் தருபவள்
தாயே தன்னலமற்ற தயாளகுணம் கொண்டவளே
தண்ணீரால் வயிறை நிறைத்து கண்ணீரால்
நெஞ்சம் நிறைத்து அமுதால் தன்பிள்ளைகள்
வயிறு நிறைப்பவள் அன்னையே குடிகாரக்கணவன்

அடித்துத் துவம்சம் செய்தாலும் காசே
கொடுக்காமல் கொடுமை செய்தாலும் அஞ்சறைப்பெட்டி
சில்லறைகள் வைத்து சிறுசுகளை சிதறாமல்
காப்பாற்றும் தெய்வமும் அவளே
அடுப்பங்கரையிலும் அலுவலகத்திலும் மாறிமாறி

அவதாரம் எடுப்பதில் மதியூக மந்திரியவளே
அன்பைக் கொடுத்து அன்பைமட்டுமே எதிர்பார்க்கும்
பாசத்திற்கு ஏங்கும் சிறுபிள்ளை அவளே
அன்னையே குடும்பத்தின் ஆணிவேர்
அன்னையே அனைத்திற்கும் முதன்மையான மாபெரும் சக்தி

மகேஸ்வரி கிருஷ்ணசாமி

# மகளிரெனும் மாபெரும் சக்தி - மகள்

மகளிரெனும் மாபெரும் சக்தியில்
மகளின் பெருமைதனை சபை மத்தியில் சொல்வதில்
மகிழ்ச்சிப் பிரவாகம் எனக்கு..

மனையெல்லாம் மகிழம்பூ வாசமதையும்
மனமெல்லாம் மகிழ் அன்பு நேசமதையும்
மகளெனப் பிறப்பவள் மகுடமாய்த் தந்திடுவாள்!
குலசாமியாய் பூமியில் பிறப்பெடுத்து
உளபூரிப்பில் உறவுகளை ஆழ்த்தும்
இல்லத்து தேவதை இவளே!
கள்ளிப்பால் கொடுத்து அன்றிவளை
கொன்றழித்த கயவர்களுக்கு
காலத்தின் தேவைகள் பதில் சொல்லும் ஒருநாள்!
மடை திறந்த வெள்ளமாய்
தடைகளைத் தகர்த்தெறிந்து
நடை போடும் மகளைக் கண்டு
மீசையை முறுக்கும் அப்பாக்களிடம் கேளுங்கள்
மகளின் மாபெரும் அருமைகளை
மனதெல்லாம் ஊற்றெடுக்கும் மகிழ்ச்சியுடன்
போற்றிச் சொல்வார்கள்
அவளின் மாபெரும் பெருமைகளை!
வேண்டாமெனப் பிறந்த மகளுக்கு
வேண்டாமெனப் பெயர் வைத்தனர்
ஒரு கிராமத்திலாம்!
இன்று அவளை வேண்டுமென
அழைத்துக் கொண்டது ஜப்பானிய பெரும் நிறுவனமாம்!
மகனுக்கு நிகரில்லை மகள்!
அவனையும் விட உயர்வு அவள்!
மாபெரும் சக்தியும் அவள்தான்!
மனையைத் தூக்கி நிறுத்தும் புத்தியும் அவள்தான்!

கீர்த்தி கிருஷ்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - மகள்

ஆனந்த யாழை மீட்டுவதும் மகளே
ஆதவனாய்ச் சுற்றி வருவதும் மகளே
அப்பாக்களின் தேவதைகள் மகளின் வடிவிலே
அம்மாக்களின் தேவைகள் தீர்வதும் மகளாலே

செல்வ மகள் நடக்கையிலே திருமகள் வருவாள்
செல்லம்கொஞ்சி சிரிக்கையிலே கலைமகள் தெரிவாள்
அள்ள அள்ளக் குறையாது அவளது அன்பு
அமுதும் தேனும் அவள்தானே - நம்பு!

மகளாய்ச் சுழன்றவள் மருமகளாய் சுமந்திடுவாள்
மண்ணைவிடப் பொறுமையாக மாண்புகள் கொண்டிடுவாள்
பெற்றோரைக் காப்பதில் பெரும்பங்கு மகளுக்கு!
பெரியோரை மதிப்பதிலும் குறையில்லை இவளுக்கு

குலதெய்வங்கள் எல்லாம் கோவிலில் இல்லை
கொஞ்சும் இவள் கொலுசொலியில் கொஞ்சியேக்கிடக்கும்
குடும்பவிளக்கு இவள்தான் உணர்ந்திடுவீர்
குத்து விளக்கும் இவள்தான் தெளிந்திடுவீர்!

அப்பா_ அம்மாவுக்கு சமாதானப் புறாவாய்!
அண்ணன்_தம்பிக்கும் இருந்திடுவாள் வேராய்
தாத்தா _பாட்டிக்கு தங்கமகள் இவள்!
தாழாது முழங்கிடுவாள் தர்மத்தின் குறள்

சிறந்த மகள்கள் சமுதாயத்தின் வேர்கள்
சிதையாத கலாச்சாரத்தின் மலர்கோர்க்கும் நார்கள்
நேசிப்போம் அவர்களின் நல்ல எண்ணங்களை
யோசிப்போம் அவர்களுக்காக புத்தம்புது வண்ணங்களை!

கவிதா அசோகன்
*திருச்சி*

# மகளிரெனும் மாபெரும் சக்தி - மகள்

மனைவியின் வடிவில் மனையினைக் காத்து
மகளென்ற உறவு மண்ணுக்கு வந்து
மங்கலம் செழித்து மாகலம் காண
மனைக்கு கிடைத்தவள் மகளென்ற பேறு

குணம் குலம் விளங்க கொண்டிடும் உறவு
குடிமக்கள் பெருக உறவுகள் தழைக்க
நிகழ்வுகள் யாவுமே நிம்மதி நிலைக்க
நினைவுக்கு வந்தவள் நின்மகள் ஐயா !

புவிதனில் நமக்கு பூமணம் பெருக
பொன் பொருள் சேர்க்க புரிந்திங்கு உழைக்க
என்புறும் நெஞ்சம் இம்மையில் சேர்க்க
இம்மகள் வந்தாள் நம்மகம் செழிக்க

தெம்புகள் பிறக்க தெளிவுகள்  கிடைக்க
திசைகளில் உறவுகள் தேடியே பெருக்க
திங்களில் பிறந்தாள் தங்கமாய் கிடைக்க
எங்களின் இல்லறம் இனிமையாய் இருக்க

அன்பினை மனத்துள் அளித்திட பிறந்து
அகவைகள் அறிந்திட அதுதனை உரைத்து
தெம்பாய் உலகில் திரிந்திட வளர்ந்து
தெளிவுகள் தந்தவள் திருத்தவ மகளே !

முதுமைக் காலத்தில் முழு மனத்தோடு
முற்றம் ஒதுக்காமல் முழு அன்பு காட்டி
மண்மீது வளர்த்த மனையற வாழ்வை
மனம் மீது வைத்து குணத்தோடு காப்பாளே !

மகளென விளம்பி விடைப் பெறுகிறேன் நன்றி

நெருப்பு க் கவிஞர் வீரா

# மகளிரெனும் மாபெரும் சக்தி - மகள்

அன்னையாய் வீட்டின் மகாலட்சுமியாய்
வலம்வரும் இல்லத்து தேவதை
கோடி கொடுத்தாலும் கிடைக்காத நல்முத்து
உன்சிரிப்பைக் கண்டே மகிழும் பெற்றோர்
இப்புவியில் பிறந்ததன் நோக்கமே நீதானே

பூர்வசென்ம பந்தமே நேரில் கண்டசொர்க்கமே
கருவறையில் நீயுதிக்க காத்திருந்தே கையேந்த
அந்நாளும் வந்ததே வானத்து நட்சத்திரம்
ஒன்றாகக் கூடியே கையில் பொதியாய்
விழுந்ததே ஆயிரம் பூக்கள் ஒன்றாய்
மலர்ந்தே சிரித்ததே என்னைப் பார்த்தே
மகளாய் அல்ல என் தாயாய் உன்னைக் கண்டேன்

நீ சிந்திடும் புன்னகையில் கோடி மின்னல்  வெட்டிடக் கண்டேன்
இதயத்துள் சாரலாய் உன்னினைவு கண்ணே
பனித்துளி போல் உந்தன் மொழியோ
காதில் சில்லென்றே பட்டுத் தெறிக்க
வானவில்லாய் உந்தன் நடையில் வர்ணசாலம்
பவழமல்லி வாசம் உன்மேனியெங்கும் மகளே

அணிந்திடும் நகையும் பேசிடும் பேச்சும்
உன்னால் அழகுற்றதே உன்பாதம் பட்ட
இல்லம் சொர்க்கமானதே என் தவறுகள் உன்னால்
சரியானதே நீயென் தேவதையே அம்மா
ஆம்...மகளல்ல நீ.. அனைத்துமானவள்...

இந்திராணி தங்கவேல்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - மகள்

மாதவம் செய்தவர்க்கே மகள்கள் பிறக்கின்றார்கள்
மானுடத்தை வளர்ப்பதற்கே மாதர்கள் இருக்கின்றார்கள்
சோதனைக்காலத்திலும் சோர்ந்து போகாதிருக்க
மனதை ஆற்றிடவே மகள்கள் மடியில் வந்தமர்கின்றார்கள்

பெண்மையைப் படைத்தான் இறைவன் மென்மையாய்
கண்ணிமைகள் போலகாக்கவேண்டும் மேன்மையாய்
மென்மையான தூரிகைகள் தான் ஓவியம் வரைகின்றன
மேன்மையான பெண்மைதான் உலகைக்காக்கின்றன

கணவன் வீடுசென்றாலும் நினைவு பிறந்தவீட்டில்தான்
காடுசென்றாலும் காத்திருப்பது பிறந்தவீட்டுச்சீதனத்திற்குதான்
அகல்விளக்கை எடுத்துச்சென்று ஆயிரம் விளக்குகள் ஏற்றுபவள்
அன்னையாக மாறியபின்பும் அப்பாவுக்கு குழந்தயாக இருப்பவள்

பிறந்தவீட்டின் பெருமையை விட்டுக்கொடுக்காதவள்
புகுந்தவீட்டின் புகழை பார்போற்றச்செய்பவள்
அப்பாவுக்கு ஒன்றென்றால் அழுதோடி வருபவள்
அம்மாவுக்கு நிகராக மாறாத அன்பைப்பொழிபவள்

பிறந்தவீட்டில் கும்பிட்ட தெயவத்தை விடுபவள்
குலதெய்வத்தைக் கூட புகுந்தைடத்தில் மாற்றிக்கொள்பவள்
இருக்கும் வரை பிறந்தவீட்டிற்குப் பெருமைசேர்ப்பவள்
இறக்கும்போதும் தான் பிறந்த வீட்டையே நினைப்பவள்

பெண்களில்லா வீடு பேரிருள் சூழ்ந்த காடு
பெண்களில்லா வீதி பெருநோய் கொண்ட வீதி
பெண்களில்லா ஊர் பேய்கள் வாழும் ஊர்
பெண்களில்லா உலகம் கொடும் பாலைவனாமாக இருக்கும்

கவிச்சிகரம் அ. முத்துவிஜயன்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - மகள்

அமிழ்தினும் இனியவள் என் மகள்
ஆனந்த பூங்காற்றாய் ஆடி வருவாள்
இயல் இசைக் குயிலென பாடி வருவாள் ..
ஈரந்தியிலும் என்னைச் சுற்றிச் சுற்றியே வருவாள்

உழைத்த களைப்பும் பறந்திடும் அவள் சிரிப்பில்
ஊடுருவி உள்ளமதை குளிர வைப்பாள்
என் மனவலிக்கு மருந்து தரும் மாயக்காரி
ஏசினாலும் பேசினாலும் பொய்க் கோபம் கொண்டிடுவாள்

ஐயிரெண்டில் உருவான எழுதாத சித்திரமவள்
ஒயிலாக நடை பழகும் தங்க தேர் பவனியவள்
ஔபரிதிகம் இல்லையே என் மகள் அன்புக்கு ...
கள்ளமில்லா பொக்கை வாய் சிரிப்பழகி

முதல் நாள் பள்ளிக் கூடம்
செல்கையில் என்னையும் அழ வைத்தவள்
எனது செயல்களை உற்று நோக்கியே
அப்படியே நடித்து காட்டும் நல்ல நடிகையவள்

எனது சோகத்தை அவளறிந்த கணம்
முகத்தோடு முகம் வைத்து சிரிக்க சொல்வாள்
வெளியூர் பயணம் முடித்து நடு இரவில் வந்தாலும்
சாப்பிட்டிங்களா என கேட்டு உறங்க சொல்வாள்
மகளே என் அன்பு மகளே

இந்த தாயில்லா பிள்ளைக்கு தாயாக பிறந்த அன்பு மகளே !
கண்களில் வைத்து உன்னை காப்பேனம்மா !

சிவக்குமார் வீராச்சாமி
விழுப்புரம்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - சகோதரி

மகளிர் என்கிற சக்தியைக் கொண்டவளே
மண்ணில் உயிர்களைப் படைத்து மகிழ்வாளே
மனதில் என்றும் கருணைக் கொள்வாளே
மனிதத்தைப் புவியில் நிலைக்கச் செய்வாளே...
அகிலத்தில் பல அவதாரங்கள் எடுப்பாளே
அருமைச் சகோதரியென்கிற அவதாரமதில் சிறப்பாளே
அன்னையைப் போலவே பாசத்தைக் காட்டுவாளே
அன்பைக் கொடுத்துப் பண்பை வளர்ப்பாளே...
தாயின் உடல்நிலை பாதிக்கப் பட்டாலே
தடங்களின்றி இல்லப் பணிகளைச் செய்வாளே
தம்பியைக் குளிப்பாட்டிப் பள்ளிக்கு அனுப்புவாளே
தங்கைக்கு உணவூட்டி உறங்க வைப்பாளே....
சகோதரன் தவறைத் தட்டிக் கேட்பாளே
சட்ட திட்டங்களைக் கற்றுக் கொடுப்பாளே
சத்திய போதனையாலவனை நல்வழிப் படுத்துவாளே
சகோதரியாய் தனது கடமையைச் செய்வாளே...
உடன் பிறப்புகளை உயிராய்க் காப்பாளே
உருகும் மெழுகாய் விரும்பி வாழ்வாளே
உதவிகள் புரிவது புண்ணியம் என்பாளே
உழைத்து வாழ்வது கண்ணியம் என்பாளே...
தன்னம்பிக்கைக் கொண்டு நாளும் உழைப்பாளே
தர்மத்தின் வழியில் நித்தம் பயணிப்பாளே
தடைகள் வந்தால் உடைத்து எறிவாளே
தனியொரு பெண்ணாய் முத்திரைப் பதிப்பாளே...

சி. பாக்கியராஜ்
தருமபுரி

# மகளிரெனும் மாபெரும் சக்தி - சகோதரி

இனிமையை வாழ்வில் என்றுமே பெறுவோம்
இன்னலும் நீங்கிடும் நாளும்
கனியினை யொத்தக் கவின்மிகும் உறவாய்க்
கண்டிடச் சகோதரி தன்னை
நனிமிகும் உறவே நவின்றிடச் சுகமே
நலந்தரு உறவிது தானே
புனிதமாய்த் திகழும் புதுமைகள் நல்கும்
புன்னகை சிந்திடும் தானே

வேண்டிடும் வரத்தைத் தாயெனப் பரிந்தே
வெற்றியாய்க் கிட்டிடச் செய்வாள்
மாண்புகள் தன்னால் மாதவ உறவாய்
மலர்ந்திடும் உறவிது தானே
பூண்டிட யார்க்கும் புன்மைகள் நீக்கிப்
புகழ்தரும் உறவிது தானே
ஆண்டவன் அளித்த அற்புத உறவாம்
அன்புடைச் சகோதரி தானே

தடைபல வாழ்வில் தொடர்ந்துமே வரினும்
தயவுடன் உதவுவாள் அவளே
கொடைக்குணம் கொண்டே கொடுமைகள் தவிர்த்துக்
கொஞ்சிடும் உறவிது தானே
படைபல சேர்த்துப் பகைவரும் வரினும்
பாசமாய்க் காப்பவள் தானே
தடையிலை இனிமேல் மகிமைகள் சேர்க்கும்
தனித்துவ நல்லுற விதுவே

மஞ்சுளா ரமேஷ்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - சகோதரி

வண்ணவண்ண பூக்களெல்லாம் வாசமின்றி பூக்காது!!
சின்னசின்ன குயில்களெல்லாம் தேனிசையை மறக்காது!
எண்ணஎண்ண இனிக்கும் என்னைவிட்டுப் போகாது!
கன்னங்குழி விழசிரிக்கும் தங்கையின்றி வாழ்வேது!
கண்களிலே கருணைமழை காலமெல்லாம் நிறைந்திருக்கும்!
கனவுகளில் அவள்முகமே தாயாகி சிரித்திருக்கும்!!
பொல்லாத சோகமிங்கே சொல்லாமல் ஓய்ந்திருக்கும்!
எந்நாளும் அவளுறவால் என்வாழ்வு நிலைத்திருக்கும்!
பெண்ணடிமை கதைகளெல்லாம் கொன்றுவிட துடித்திடுவாள்.!
வெங்கொடுமை சாத்திரங்கள் வேரோடு அறுத்திடுவாள்!
பொன்பொருளை புறந்தள்ளி பாசஒளி வீசிடுவாள்!
கண்ணுறங்கும் வேளையிலே தாயாகி காத்திடுவாள்!
நோய்களென்னை தாக்கிடவே தூக்கமின்றி தானழுவாள்!
ஓய்வுதனை தொலைத்தவளே தாபாகி காத்திடுவாள்!
கனிபமாழி பேசி அவள் களைப்பினை களைந்திடுவாள்!
இழிமொழி வரும்வாழ்வை வலிவொடு மாற்றிடுவாள்!
சிரித்த முகத்தழகு தங்கக செந்தமிழின் நடையழகு!
சிறுஊடல் ஓரழகு அவள் மறுகூடல் பேரழகு!
மேகத்துக்கு நிலவழகு! எந்தன் மனத்துக்கு அவள்தான் அழகு!
சொந்தங்களும் பந்நங்களும்சீராட்டி பாராட்டும்!
தங்கையிவள் வாழ்வுஇங்கேகங்கையென பேர்காட்டும்!
இன்றெனக்கு வாழ்வினிக்கும! என்றும்
பொன்னாளாய் மணம்பரப்பும்!
வாழ்க தமிழ்! வெல்கதமிழ்!

அ. பாண்டுரங்கன்
மதுரை

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

அன்பினிலே அன்னை யவள் அறிவுறுத்தும் ஆசான் அவள்
அழகினிலே அன்னம் அவள் அரணெனக்கு ஆனாள் அவள். (அவளே)

சேர்ந்து பிறந்தோ மில்லை சேர்ந்து வாழ்ந்தோ மில்லை
சோர்ந்திடும் போதெல்லாம் சோகங்கள் தீர்ப்பாளவள். (அவளே)

பேசாத நாட்களுண்டு பார்க்கமல் வருடங்களுண்டு
பாலினுள் நெய்போல பாவையவள் மனதிலுண்டு. (அவளே)

தங்கமே வைரமே.. தித்திக்கும் பலாச் சுளையே
திகட்டாத தேன் தினையே திட்டியதும் தேடிடுவாள். (அவளே)

கல்லூரிக் காலங்களில் கட்டுக்கட்டாய் புத்தகங்கள்
விட்டணைத்த மகிழ்ச்சிகளும் சிட்டாகப் பறந்திடுவோம். ( அவளே )

மனவூஞ்சலின் மையப் புள்ளி மகிழ்தோரணம் ஆடும் பள்ளி
மயக்கமறுத்து மனதிலிருத்தும் இயக்கம் என்னுள்ளவள்.( அவளே)

வந்துபோகும் சொந்தமெல்லாம் வற்றிப்போகும் பாசமெல்லாம்
பெற்றமகவும் பிரிந்திடுவார் உற்றதோழி உறவானாள் (அவளே)

வண்ணத்துப் பூச்சி யெல்லாம் எண்ணத்தில் சிறகடிக்கும்
மென்கீற்று சாரலெலாம் மெல்லிசையாய் கவிபாடும். (அவளே)

கற்பனைகள் விரிந்தாலும் காலங்கள் பறந்தாலும்
கலையாதே அவள் நினைவு கண்ணுக்குள் நின்றாளவள்.(அவளே)

மருத்துவர். உசாதேவி

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

வாழக்கை பயணத்தில் வழித்துணையாய் வந்தவளே
உயிரிணைத் தோழியாய் உள்ளம் நிறைந்தவளே
உன்னையன்றி இப்பிறப்பில் உலகிலேதும் துணையில்லை
மனதுக்கும் உன்னையன்றி மறந்தும்கூட இணையில்லை...

மனையினை ஆள்பவள் மனைவி என்றால்
துணையாக வருபவள் துணைவி என்றால்
இரண்டுமாய் இருப்பவளைத் என்னவென்று சொல்வேன்
இவ்வுண்மை சிறப்பாய் தோழிதான் என்பேன்...

என்சுமை இறக்கிடவே எனையாளும் நீயாகி
உன்சுமை இறக்கிடவே ஒருவழியும் உரைக்காமல்
விடியலுக்கு முன்னேயே விழித்தே எழுபவளே
வீடே தூங்கியதும் விழிமூடிப் படுப்பவளே...

வெள்ளி முளைக்குமுன்னே வீடுவாசல் தெளித்திருப்பாய்
ஆறுமணி ஆகுமுன்னே அலாரத்தையும் நிறுத்தியிருப்பாய்
கோழிக் கூவுமுன்னே குளித்தும் முடித்திருப்பாய்
நீநட்ட செடிகளுக்கு நீரூற்றி வைத்திருப்பாய்...

ஏழுக்குப் பின்னால்தான் என்னையும் எழுப்பிடுவாய்
எட்டுக்கு முன்னாலே எல்லாமும் முடித்திருப்பாய்
ஏழுக்கு எழுந்திருக்கவே எப்போதும் அலுப்பெனக்கு
அனைத்துநாளும் எழுந்திரித்தும் அலுப்பெங்கே தோழியுனக்கு...

தோட்டது அணிலுக்கும் சோறுவைக்க சோர்ந்ததில்லை
மூன்றுநாள் விடுப்புகூடமுழுதாயுனக்கு வாய்த்ததில்லை
மனதோடு கோபங்கொண்டு மாடாய்நான் உழைத்தாலும்
நாட்காட்டி கணக்கிலே நாலாறுநாள் தாண்டவில்லை...

செல்வா ஆறுமுகம்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

மாபெரும் சக்தி தோழி மதியால்
மகிழ்ந்தனாள் மணிமேகலை சுதமதி தோழியால்
கண்ணின் கருமணி காத்தவள் தோழி
கற்பிற்கினிய கண்ணகி கொண்டாள் தேவந்தி

கண்டது காலமும் கொண்டதே இன்பம்
கற்புநெறியிலும் அறநெறியிலும் வழிகாட்டிய வாழ்வியல்
கடும் சோகமோ கருணையுடன் காப்பாள்
காலமகளே கண்டது காடுகொள்ளா காதலோடு

கனிந்தும் கசிந்தும் அறமோடு ஆட்க்கொண்டாள்
துணிந்த செயலுக்கும் துணவிப்போல் தோளிடுவாள்
துவண்ட தோல்விக்கும் துளிகண்ணீர் துடைத்திடுவாள்
தூரமாய் கண்டாலும் துணையான கடவுள்

இணையாக இறைவனோ இவள் கொஞ்சம் கூடுதல்
எப்போதும் என்தாயாய் ஏகாந்த கவிதையவள்
ஏழுசுவர இசையொலியாய் எழுந்திடுவாள் அழகாய் தோழியே
எட்டுத்திசையும் ஏழுஉலகமும் ஏணியான எழிலரசி தோழியே

எழுதிய இளம்பூரணர் தொல்காப்பியனும் சொல்லாத தோழியவள்
என்னுடன் ஏற்றது ஏற்றமே என்குலமே
எங்கிருந்தாள் ஏழைமாரி ஏந்திகிறாள் இயசுமரியாள் போலே
இவ்வுலகம் இயங்கும்வரை இவளொன்று வரமே

அவ்வுலகம் அடைந்தாலும் அவளோடு உறவே உளமே
ஆனந்தமோ அவசுவரமோ அகிலண்டஈஸ்வரி அவளேயென் தோழி
அர்ப்பணித்த அவள்வாழ்வே அடிபணிந்தேன் அகம்மகிழ்ந்தேன்
அன்னையவள் போனாலும் அவள் துணையே போதும்
என்னையவள் வெறுத்தாலும் என்இனியவள் தோழியே வேண்டும்

மன்னை மணிமாறன்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

தோழியே...
தொலைவில் இருந்தே தோள் சாய்த்துக் கொண்டு சேயாய்ச் சுமப்பவள் அவள்..
உட்புறமாய்த் தாழிட்டு உள்ளச் சுமைகளுடன் பயணித்த நாட்களை
இயல்பாய் திசை மாற்றியவள் அவள்..
மாபெரும் சக்தி அவளே..ஆம்
என்னின் தமிழ்ப் பித்தை தணிய வைப்பதற்காக தனித்தமிழ்ப் பாக்கள் எழுதியவள் அவள்...
என்றன் மெய்யுணர்வைப் பணிய வைக்க பொய்யில்லாப் புன்னகையைப் பரிமாற்றம் செய்தவள் அவள்..
என்றன் ஆன்மீகப் புலத்தை அவளின் ஆன்ம பலத்தால் ஏற்ற வைத்தவள் அவள்...
தோழி..
அத்தனைப் பேரன்பும் குருதி பந்தத்தில் ஏற்படாமலேயே குருதியோட்டமாய் வலிமை சேர்த்தவள் அவள்..
சிந்தைக்குள் அத்தனை வலிகள் இருந்தாலும் புதிதாய் சிந்திக்க வைத்து சந்தப்பாக்கள் உரைத்தவள் அவள்...
தீ எனைச் சுட்டெரிக்கத் தயாரான போதெல்லாம் பீனிக்ஸ் பறவையாய் எனை உரு மாற்றியவள் அவள்..
எட்டொ நின்றே ஏழேழு பிறவிக்குமான மொத்த அன்பினைப் பரிமாறியவள் அவள்..
தோழி...
வையகம் எங்கு தேடினும்
கிடைத்திடாத மாபெரும் உந்து சக்தியாய் என்னுள்
உரைந்திருக்கிறாயடி.. பெண்ணே ஏனோ மண்ணிற்குள் ஒளிந்து கொண்டாயடி...
நீயே என் மாபெரும் பெண் சக்தியடி..
தோழி,,
உனைக் கருவிலேற்கக் காத்திருக்கிறேனடி ..ஈரேழ் பிறவிக்கும் உனைச் சுமக்கும் வரம் தா
தோழீ... வரம் தா

ஆதிரை
பட்டீச்சுரம்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

அன்பிற் குமுண்டோ பேதமை  - நாளும்...
அன்பாய்  கூடியே மகிழ்ந்தி டுவோமே...
பண்பில் சிறந்த தொருக்  குணமதியாம்...
என்பில் கலந்த கலங்கமிலா தோழியாமே...
வம்பிலா வரம்புடைய வான்மதி நட்பாம்...
எங்கினும்  நலமாய்நட்பினை விதைத்திடுமே...
எம்மன  வானில் வான்மதியாய் ...
எந்நாளும் ஒளிர்ந்து இன்பம் சேர்த்திடுமே...

கள்ளம் கபடமிலா தூய்மை உள்ளமது...
கயமை பொய்மை யில்லா....
உள்ளத் துயரிய உண்மை உறவுமது...
அன்பில் அன்னையாய் அரவணைப்பில் துணையாய்...
பாசத்தில் மகளாய் நேசத்தில் சகோதரியாய்...
மண்ணில் அவதரித்த மாசற்ற உறவது...
எந்நாளும் துணையாக வந்திடும் ...
என்னவளின்  ந ட்பினிலே நாளும் மலர்ந்திடுவோமே...

சொந்த மில்லை பந்தமும் யில்லை...
ஆனாலும் நமக்கெ  எனவே  துடித்திடுமே...
துவண்டு நாமும் நிற்கை யினிலே...
துவளாது நம்மை அரணாய் காத்திடுமே...
ஆண்மை பெண்மை  பேதம் விலக்கியே...
உண்மையாய்  நாமும் தோழமை கொண்டால்...
வினையாய்  வந்த  துண்பமும்  விலகிடும்...
துணையாய் தோழியின் நட்பும் வந்திடுமே...

புதுவை சரவணன்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

காற்றுக் கென்ன வேலிவந்து நின்றால்,
நட்பை நன்கு அறிந்த தோழி
நட்பின் தூய்மையிலோ அவள் ஆழமுள்ள ஆழி
யாதுமாகி நின்றால் உவகையோடு நானே,

யானே என்று முன் வந்தால்
அறிதல் புரிதல் இருந்தால் நட்பில்
பிரிதலுக்கு இடமுண்டோ பேதம் பார்த்தால்.
ஆண் பெண் நட்பு அகிலத்தில் வளர வழி உண்டோ

பேதம் பார்ப்பது நட்பில்லை
பேதம் பார்த்தால் அது நட்பேயில்லை
ஆறா துன்பம் வந்த போது
ஆறுதல் சொல்லி அடிமை ஆக்கவில்லை

துணிச்சல் தந்து வெற்றி பெறதூணாகி
நின்றால் யாதுமாகி நின்றால்யானே
என்று உதவிக்கு ஈகையோடு ஓடோடி
வந்ததால் தன்னலம் என்று என்னலம்

பார்த்தால் தன்னலமில்லா உயர் தோழி
நட்பில்லா உயிரிகள் நானிலத்தில்உண்டோ
நட்பில்லா உயிரிகளுக்கு உயர்வேதும் உண்டோ
தோல்வி துவள தோழி தூணாகி,

நின்றால் வெற்றி வாசல் வர வேதமாகி,
நின்றால் நானிலத்தில் நான் உயர
வரமாகி நின்றால் வாழ்வில் நானுயர
தோழி வழியாகி நின்றால்தோழியின்

நட்பு முற்பிறவி வரம் அன்றோ
தோழியின் நட்பு காலத்தின் பலமே

நாராயணன் சங்கர்

# மகளிரெனும் மாபெரும் சக்தி

வெண்குருதி தானத்தில் விருட்டமாக்கும் வித்தவள்
ஆதி அந்தத்தின் மூலக்கூறாக...
தொலை நோக்கு சிந்தையில் ஆழியவளே...!!
பண்முகத் திறனால் ஒளிரும் ஒளியாய்..

பெண்புத்தி பின்னென புறந்தள்ளிய மாதையரும்..
மருத்துவ முன்னோடியாய் புகழாரம் சூட்டிடத் தான்
போதிய நேரம் காணலையே...!!!
இழிவென தூற்றிய சுற்றமும் வியந்திடும்

மண்பார்த்த பாதமும் வீரநடை போட்டிட
பட்டமும் வென்றிடுவாள்  பாராளவும்
புன்னகை பூத்திடுவாள்...

தலைநிமிர்ந்து நிற்கிறது எரிதழலும் விண்ணோக்கி ...
வளை பூட்டிய கரத்தினிலே
பந்தமும் பாசமும் பகடையாய் உருட்டினாலும்
அண்டத்தை வென்றிட ஆதவனுடன் போர்த் தொடுப்பாள்...

எண்ணக் கலவைகள் சிறிதாயினும்
அணு ஆய்வை தகிர்த்திடும் வல்லைமை உண்டே....

ஆணுக்கு பெண் அடிமையும் தீர்ந்திட
எடுப்பார் கைப்பிள்ளையும்
தன்மானம் தனை வார்த்தே காத்திடுவாள்...

அல்லும் பகலும் அயரா துழைத்து
கடமையே கண்ணென குடும்பமும் கோவிலென காத்திடுவாள்...

ஆயிரம் கண் கொண்ட அவதாரமாக
பெண்ணுக்குள் அடங்கும்  அத்தனை சிறப்பும்

மகேஸ்வரிகண்ணன்

# மகளிரெனும் மாபெரும் சக்தி

மகளிரெனும்மாபெரும்
சக்தியிங்கு பெரும்சக்தி...
சக்தியோடும்யுக்தியோடும்
சாதிக்கும் ஞாணியவள்...

ஞானங்கொண்டஎவருமிங்கே
மோனங்கொண்டு நின்றிடுவார்...
நின்றிடுமேபெண்ணவளின்
பெருமையென் றென்றும்...

என்றுமவள்தியாகத்துக்கு
நிகரான செயலுண்டோ...
செயல்களெல்லாம்விளைவதிங்கே
பெண்ணவளின் அறிவாளே...

அறிவார்ந்தப்பவிகளில்
அதிகாரம் நாட்டிடுவார்...
நாட்டிற்கேத்தலைமையாக
நடத்தி வழிக்காட்டியவர்...

வழிக்காட்டிமரமிவளே
பலவித்து விதைத்திடுவாள்...
விதைப்பதனால்அன்னையெனும்
அருந்தவப் பெயர்பெற்றவளே...

பெற்றெடுத்தத்தாயவளின்
பெருமையென்றும்குறைந்ததில்லை...
குறைகாணாகுலமகள்தான்
குடும்பத்தின் விளக்கிவள்...

விளக்காக சுடர்விடுவாள்
விளங்கிடவே வாழ்க்கையிலே...
வாழ்க்கையிலேஆதாரம்
குடும்பத்தின் அரிதாரம்...

புதூர் சீனிவாசன்

# மகளிரெனும் மாபெரும் சக்தி

இன்பமெனும் சொல்லுக்கு உருவமளித்த இலக்கணமே
அன்பெனும் ஆற்றல்மிகு சொல்லுக்குரிய பெண்யினமே
கொடையாய் கருவறையில் தொடர்ந்தணைத்த காப்பகமே
தடைவிரட்டி பொருமையுடன் காத்தருளும் பெட்டகமே

மடியமுதுடன் மனதிடம் புகட்டிடும் திருவுருவே
நாடிடும் மனங்களுக்கு நன்னிழளிக்கும் பெருந்தருவே
ஆதிக்கத்தை ஆற்றலால் வீழ்த்திடும் சாகசமே
சாதிப்பதையே தனக்குள் உள்ளடக்கிய சரித்திரமே

சுழலும் உலகின் சுகங்களின் வடிவமாம்
மழலையை சுமந்து மகிழ்வளிக்கும் மகிமையே
இருவிழி பார்வையிலே எதிர்ப்பை திரட்டி
பெருந்துயரை செயலிழக்கச் செய்யும் பேராயுதமே

வண்டினத்தை வரவழைக்கும் மகரந்த மலர்களாய்
கண்ணசைவில் காளையரை ஈர்க்கும் காந்தமே
ஓடும் ஆறாகி நடனமாடும் நதியாகி
தேடும் கனிக்கூட்டம் யாவிலுமுன் திருநாமமே

அகத்தினுள் நிறைந்து அங்கமெங்கும் சங்கமித்து
நிகரில்லா சிறப்பினை எமக்களிக்கும் இறைச்சிற்பமே
ஈன்ற பிள்ளைகளின் இன்முகம் காண்பதையே
சான்றிதழ் எனயெண்ணி ஆர்ப்பரிக்கும் சமுத்திரமே

காற்றில்லா பூமியது கற்பனையிலும் நிலைக்காதே
நீரில்லா வாழ்வினை நினைத்திடவும் இயலாதே
இவ்விரண்டும் இல்லாமல் பேரண்டம் சுழலாதே
அவ்வாறே பெண்யினமின்றி பேரின்பம் பிறக்காதே

கவிஞர். நா. பிரகாஷ்

# மகளிரெனும் மாபெரும் சக்தி

அன்னையாய், தங்கையாய், தோழியாய், தாதியாய், மகளாய்
அனைத்து அவதாரமும் அவளுடையதே, அதில் அரிதாரம்கூட அழகானதே!

சூழ்நிலையின் சுகமறிந்து எதிர்வாதம் ஏற்றுக்கொள்வாய்
உன் கண்ணீரை மறைத்துக்கொள்வாய்
தூண்போலத் தாங்கிய ஆண் கடமைதவறினும்,
காலன் அவன் பணிசெய்திடினும், பொறுப்பேற்று துறப்பாய்
உன் சுகங்களை, அதற்கேனும் இருப்பாய் சில தவங்களை!

படிதாண்டிய நொடிப்பொழுதிலிருந்தே பல இன்னல்கள்
மின்னலாய் வெட்டும், இடிபோலும் இறங்கும்
அனைத்தும் களைந்து, கடமையில் நுழைந்து
கச்சிதமாய் நகர்த்திடுவாய் வாழ்க்கைச் சக்கரத்தை!

உறங்கும் நேரமதை சுருங்கச் செய்து அந்நேரம் அலுவல் பணிமுடித்து,
உடல் களைத்து உட்கார நேரமின்றி அரக்கப் பரக்க
அலுவலகம் சென்றாலும், அதிகாரி சொல்வதோ இன்றைக்குள்
முடிக்கவேண்டும், விரைவாக வேலைசெய் என!

பெருமைப்படு பெண்ணே சக்தியின் வடிவம் நீ
ஆனால் இவையெல்லாம் கடந்திட உனக்குள்ளும் வேண்டும் சக்தி!
உள்ளத்தை உரமேற்றி, உன்னை நீ திடமாக்கு,
துயரமா அழு! கணமான இதயம் கரைவதற்காய் அழு!
கண்ணீரால் உன் இதயம் சலவையாகட்டும் சற்று அழு!

அதன்பின் எழு! நட! நிதானமாய் நட! உண்மையை உடனழைத்துக்கொள்!
ஒழுக்கத்தை உயிரெனக்கொள்! கர்வம் கடந்தவோர் கம்பீரம்
கட்டாயம் வேண்டும்! தடைதாண்டும் துணிவும், தலைவணங்கும் பணிவும்,
எதிரியின் முன் வீரமும், ஏழையின் முன் ஈரமும்,

இதயமதன் துடிப்பை நிறுத்தும்வரை, உன் உடலுக்கு தந்திடு
உழைப்பதனை, உணர்ந்திடு உன்சக்தி உன்கையில்!

ச. சண்முகப்பிரியா,
புள்ளம்பாடி

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தமக்கை

(சகோதரி)

தம் அக்கை கையில் ஏந்தியே
மார்பில் தாங்கி அடிசில் ஊட்டி
எனக்குத் தாயுமானாள் ! தம் கையில்
தாங்கி வளர்த்தவள் தங்கையானாள் எமக்கு
.
மருள்நீக்கியார் அப்பர் ஆனது தமக்கையால்
அருள்மொழி இராசராசன் ஆனதும் தமக்கையால்.
தங்கையால் நாமும் தாயாகலாம், தமக்கையால்
மீண்டும் நாம் சேயாகலாம் இனிதாய் !
.
ஆவும் மாவும் புள்ளும் உடன்பிறப்பே
இற்கையோடு இயைந்த தமிழர் வாழும்வகையே !
புன்னை மரம்நோக்கப் பேசவும் நாணுவர்
புன்னையும் தங்கையே காதலர் முன்னே !
.
அக்கா என்றே அழைத்திடும் கிள்ளையும்
துள்ளிக் குதிக்கும் கன்றும் செல்லமாய்க்
கொஞ்சிட அன்பு மிஞ்சிடும் நம்பியே
தொப்புள் கொடியுறவில் தித்திக்கும் இல்லறம் !
.
நான் சிரித்தால் அவள் சிரிப்பாள்
நான் அழுதால் அவள் துடிப்பாள் !
தலைசீவி பொட்டுவைத்து பள்ளிக்கு அனுப்பிடுவாள்
கருப்பான விரலுக்கு மருதாணி இட்டுவைப்பாள்!
.
தங்கையும் தமக்கையும் தாய்மையின் உறைவிடம்
உரிமையில் கடிந்துரைக்கும் நன்நெறி புகட்டும்
அன்னையின் அவதாரம் அன்பால் அகிலம்
இயங்க அவள் தானே ஆதாரம் ..!

செல்வம் பெரியசாமி

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

எமது நட்பு
அருகம் புல் கிள்ளி எறிந்தாலும்
மீண்டும் முளைக்கும்
அற்புத மூலிகை போல
எமது ஆளமான நட்பு

காலங்கள் உருண்டது காட்சிகள் மாறியது
திருமணம் நடந்தது குழந்தைகள் பிறந்தது
இருவருக்கும் மீண்டும் துன்பம் துயரம்
ஆழிப் பேரலையாக தாயும் வெறுத்தனர்
சகோதரங்களும் மறந்தனர்  ஏன்?
கணவரே சினந்தார் பல நேரங்களில்
என் தோழி மட்டும் அன்று போல் பசுமையாக.
இவளின் மடியில் எனது கண்ணீர்
மெல்லத் துடைப்பாள்என் முகத்தை தடவி
அவள் அன்பு உதடை பதிப்பாள்
அப்பப்பா... என்ன ஒரு மின்சாரம்

கூறாமல் கூறுவாள் நான் இருக்கிறேனடி செல்லம்
ஏன்? உனக்குக் கவலை என்று

அவள் மாபெரும் செல்வச் சீமாட்டி அல்ல
மனதால் உயர்ந்தவள்  எனக்காக எல்லாம் இழப்பவள்

இறைவா... எனக்கொரு வேண்டுகோள்!...
வரம் தருவாய்... எனது உயிர் பிரிவது
எனது தோழியின் மடி சாய்ந்து.

எனது மகள் எனது தங்கை எனது தமக்கை
எனது தாய் அனைத்திற்கும் மேலான உறவு,
கள்ளமில்லா சொந்தம் வற்றாத ஊற்று.
ஆம்,எனது தோழி  எனது உயிர்த் தோழி

சர்மிளா ஏஞ்சல்

# மகளிரெனும் மாபெரும் சக்தி - தோழி

படிக்கும் போதினிலே பக்கத் துணையிருப்பாள்.
பாலுடன் கலந்த நெய்போல
சிக்கலில் விழும் நேரம் சிறகெனவே அணைத்திடுவாள்!
பாசத்தின் உச்சத்தைப்
பக்குவமாய்க் காட்டிடுவாள் ! நேசத்தின்  உச்சத்தில்
நாங்களுமே சபரியும் இராமனுமாய் !

தடைகளை உடைத்திடுவாள் தன்னலத்தை ஒதிக்கிடுவாள்
நடையாய் நடந்திட்டே நாளெல்லாம் உழைத்திடுவாள்.
சிறுகையேந்திய அந்தச்சின்னக் கடலைமிட்டாயும்
மறுகை நீட்டிட மறுப்பில்லாக் காக்காய்க் கடியாக்கும்
வேகம்  காட்டிடுவாள் !

நேயத்தில் அவள்இராமனென்றால்
நெக்குருகும் அன்பில்நான் குகனானேன்!
ஆழ நீச்சலிட்டு அந்த ஐயராத்துப்பெண்
அயிரைமீன் பிடிக்க - எனக்கு
அவளே அன்பின் எல்லை என்பேன்!

தளிர்நடை பயிலும்! தங்கத்தேர் அவளே! - என்றும்
தனியாத பாசத்தில்தன்னிகரில்லாத் தாயும் அவளே!
ஓயாது பேசியே என்னைஊமையாய் ஆக்கிடுவாள்!
காயாத வார்த்தைகளில் சிலநேரம்கண்டித்தும் திருத்திடுவாள்!

வாசனை மல்லிகையைவாஞ்சனையாய்ப் பறித்திடுவாள்
வாடி என்னன்பே என்றுவகைவகையாய்ச் சூட்டிடுவாள் !
அன்புமணம் கமழும்அழகு பூச்சரத்தை
இன்புறச்சூட்டிடுவாள்! என்னைஇழுத்து அணைத்துக் கொள்வாள்!

அன்னையும் அவளே!என்அகிலமும் அவளே!
முன்னை நான் செய்த மிகுபல  தவ வடிவும் அவளே!
பெண்ணெனும் மாபெரும் சக்தியும் இவளே!

கிருஷ்ணதிலகா

# மகளிரெனும் மாபெரும் சக்தி

மாதராய் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டும்!
மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்!
மாதரைப் போற்றியே பாடினான் பாரதி!
மாதரைப் பாடிட நானிங்கு வந்தேன்!

கருவில் சுமந்த தாயவள் பெண்ணே!
கருவை சுமந்திடும் மனைவியும் பெண்ணே!
கருவில் உதித்த மகளும் பெண்ணே!
கருத்தை கேட்டிடும் தோழியும் பெண்ணே!

விண்ணில் உலவிடும் நிலவும் பெண்ணே!
மண்நிறை பூமித் தாயும் பெண்ணே!
தண்ணீர் பாய்ந்திடும் ஆறுகளும் பெண்ணே!
எண்ணம் முழுநிறை தமிழ்மொழி பெண்ணே!

பெண்களுக் கெதிராக நாளும் கொடுமைகள்
பெண்சிசுவை வல்லுறவு கொள்ளும் மடமை!
பெண்ணியக் கொடுமையை தடுக்காத நீதி!
பெண்கள் பாதுகாப்பு கேள்விக் குறியானதே!

பெண்களைப் பற்றி தவறான சித்தரிப்புகள்
எண்ணம் கொண்ட ஊடகத் தொடர்கள்!
பெண்கள் வீட்டின் கண்கள் என்பேன்!
பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்போம்!

பெண்ணியம் போற்றிய மானுடர் இன்றோ
கண்ணியம் தவறும் காட்சிகள் முறையோ!
பெண்ணென்பவள் தாயின் அம்சமென உணர்கவே!
கண்ணைப் போல் காத்திடல் நன்றே!

கவி காந்தி. கருணாநிதி

# வள்ளுவர் காட்டிய காதல்!

காதலெனும் நதியினிலே கண்கள் பாடும்
கற்பனைகள் ஊற்றாகி கனிவாய்க் கூடும்.
கீதங்கள் தென்றலோடு கிளிபோல் பேசும்
கீழுதடும் மேலுதடும் கெஞ்சிக் கூசும்
பாதங்கள் பஞ்சாகிப் பறக்கும் வானில்
பகுத்தாய்ந்து படைத்திட்டார் பாக்கள் தேனில்
மாதங்கள் காதலாலே மணிக ளாகும்
மறைத்தாலும் சுடர்விட்டு மலரும் தானே.

நோக்கங்கள் இரண்டாக நோயு மொன்றும்
நோயினுக்கு மருந்தாக மாற்று மொன்றும்
நோக்குமிடத்து மண்பார்த்தாள் நுகர்ந்தாள் இன்பம்
நோக்காமி டத்தவளும் நுகர்ந்தாள் இன்பம்
தாக்கிடவே போர்க்களத்தில் தடுத்து நின்றான்
தாக்கிட்டாள் கண்களாலே தளர்ந்து நின்றான்
தூக்கமில்லை பேச்சுமில்லை துன்ப மில்லை
தொட்டிடவும் உதடுகளும் தோற்க நின்றே .

மெல்லியலாள் உமிழ்நீரும் மேன்மை யென்றும்
மெய்யோடு உயிர்கலந்த மென்மை யென்றும்
நல்லியல்பால் இருப்பதற்குத் தடையாய்ப் பாவை
நாளெல்லாம் தன்னுடனே தாங்கும் பூவை
செல்லாமல் இருப்பதற்கே சேயோள் கண்கள்
சேர்வதில்லை சிறைபிடித்தும் சிக்கி ஏங்கும்
வெல்லுகின்ற சொற்களிலே வியப்பாய்த் தேனே
வேலாகப் பாய்ச்சிடுவாள் விந்தை தானே.

கோவிந்தராசன் பாலு
கும்பகோணம்.

# வள்ளுவர் காட்டிய அறம்

வாளோடு வேலும் வலுவானத் தோளும்
ஆளோடு புரவி அறைகின்றப் போரும்
மண்ணோடு குருதி மடிகின்ற சமயம்
கண்ணோடு கருத்தாய் - நெஞ்சில் கள்வடி அமுதாய்

சொல்லோடு பொருளை
இன்னும் பலகருத்தை - காலத்தேர்பூட்டி
வில்லோடு அம்பாய் தைத்திட்டார் மனத்தில்

குருதி காணாது - நம்
குலம் தழைக்காது என்று
புலம்பியோர் பிஞ்சு நெஞ்சில்
புரையோடிக் கிடந்தோர்பழங் கதையில்

அன்பென்றும் அருளென்றும்
பண்பென்றும் பகையில் லென்றும்
பண்ணோடு பண் ஆற்றுப் படுத்தினார்

அறம் சொல்லித்தந்து - குறள்
அறத்தோடு நெறிபோதித்தது
வள்ளுவத்தின் திறம்
உலகம் செய்தொழில் கொண்டே செய்திட்டப் பழியை

சாத்திரம் சொல்லிய சாதியக் கறையை
குறையின்றி மனக்கறையின்றி
குணத்தோடு குவளையம் போற்றும் அறத்தோடும்

நெல்லும் மணியும்புல்லும் பூண்டும்
சொல்லும் செயலும்செய்யும் தொழிலும்
நேற்றும் இன்றும்நாளும் பொழுதும்
நாகரீக குணமும்நிலைத்த தெல்லாம்

வள்ளுவம் கண்டஅறத்தின் பொருளென்றால்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்

செருவாவிடுதி சி. செந்தில் சுலோ

# திருக்குறளில் அறம்

திருக்குறளில்அறம்என்பதேன்
அதைக்கொஞ்சம்மாற்றுவோம்
திருக்குறளேஅறம்என்போம்
அதுவேதிகட்டாதசெவியின்பம்

அறம்பொருள்இன்பம்
முப்பாலும்அறம்சொல்லக்கண்டோம்
மறம்கொண்டநெஞ்சும்
அறம்கண்டால்அஞ்சும்

விழுமம்துடைத்தவர்நட்பில்
விழாமல்பிடித்தால்அறத்தை
எழுமைபிறப்பும்சிறப்பே
எய்துவர்எய்தாப்புகழே

பிறன்மனைநோக்காபேராண்மை
பின்பற்றதெரிந்தால்நன்மை
அவ்வறமேஇறைமைஅருகாமை
வேறென்னவேண்டும்பெருமை

இராசாநீதிபேசும்உலகில்
அரசநீதியைஅறத்தால்உயர்த்தி
அழித்தாய்புறத்தேஅனைத்தும்
தவிர்த்தேதமிழின்செறுக்கே

ஏழுபிறப்பையும்அறத்தால்
ஏழு(உ)லோகத்தையும்எழுத்தால்
இரண்டேஅடிகளில்அளந்தாய்
யாதவர்தலைவனும்தொடவில்லை
இந்தத்தமிழனின்எல்லை

நா. மூதூரான்

# திருக்குறளில் அறம்

தமிழின் கதியிது தரணிக்கு விதியிது
உமிழும் குறளெலாம் உயிரின் வழியிது
அமிழ்தாய் இனிதாய் அகிலத்தில் கலந்தது
நிமிர்ந்து நிலைத்திடும் குறள்.

இல்லமும் துறவும் இரண்டாய் பகுத்து
சொல்லில் சுடரொளிச் சோர்வின்றி சமைத்து
நல்லது எதுவென நயமுடன் தொகுத்து
வில்லிலே பாய்ந்தது அறம்.

சிறப்பும் செல்வமும் செழித்திடச் செய்திடும்
மறத்தின் துணையாய் மாண்புடன் நின்றிடும்
புறமது சொல்வதைப் பேதமை என்றிடும்
நிறமது மாறிடா அறம்.

குற்றம் களைவதும் குறையது சொல்வதும்
பெற்றிடும் புகழதைப் பெருமையாய்க் கொள்வதும்
உற்றவன் கொடுப்பதை உயர்வென மெல்லுவதும்
பற்றிடும் பேருஅது அறம்.

அன்பில்லா உயிருக்கு அறிவைப் புகட்டிடும்
வம்பில்லார்க்கு மட்டுமே ஆசையை நிறைத்திடும்
இன்சொல் யாவுமே இனிதாய் நிலைத்திடும்
நன்மையில் விளைந்திடும் அறம்.

ஆசையோடு சினமும் ஆகாக்கடுஞ் சொல்லும்
வசையான பொறாமை வாழ்க்கையை கொல்லும்
அறிவுடையார் நடப்பதுவை அறிந்து செல்லும்
அறத்தொடு சொன்னது குறள்.

க.மணிவண்ணன்
புதுக்கோட்டை

# திருக்குறளில் அறம்

நிமிடங்களை நகர்த்தும் நொடிகளின் படிகளை கடக்கக் கூட கலையாகப்
பகுத்தே விலைமதிப்பில்லா நிலைபெற்று சிலையாக
மலையாய் உயர்ந்தே வலைவீசிய வாழ்வாழிக்குள் சிக்கிய
முத்துக்களை வித்திட்டு
தித்திக்கவே திருக்குறளைத் தந்தாயோ! எங்கள்
தமிழ் தெய்வப் புலவனே...!

இல்லறத்தில் நல்லறம்! ஒழுக்கமதில் புதுரகம்!
தந்தை சொல்ல விட்டதையும்
முந்தை வரலாறு வகுக்க மறந்ததையும்
சிந்தை முழுக்க நிறைந்திடவே விந்தை அறத்து சேதியெலாம்
மந்தைப் பெருக்கெடுத்தே முந்தும் திருக்குறளே...!

புத்தனும் சித்தனும் நித்தமும் கண்டிட்ட நெறியினை
மொத்தமாய் கூறுகளாய்
பொறித்திட்ட பொறிதுலக்கும் தீப்பொறியே! திருக்குறளே...!

மனைக்குள்ளும் மாடத்துள்ளும் நாட வேண்டவே! நயங்களோடு நாடறிய
நடப்பியலோடும் நகர்ந்துவரும் நரகமதை
வேரறுக்க அரமாகத் தான் அறத்தைத் தந்தாயோ! திருக்குறளே...!

இலக்கணம் இல்லாதெதுவும் முழுஉருவமாகதென்பது
வாழ்வுக்கு மட்டும்
விதிவிலக்காவென வினவ விளக்கமானாயோ?
விளங்க வைத்த எங்கள் திருக்குறளே...!

உன் அறத்தை நாங்கள் மறந்தால் அறவே ஒழிந்து போவோமே!
எங்கள் அறத்தைக் காட்டத் தான் உன்னைப் போற்றி பாடுகின்றோம்!
உலக அறம் ஓங்கத்தான் நாளும் பரப்பி நிற்கின்றோம்!
அறங்கள் பெருகி நின்றாலே! பிறவிப் பேறும் பெற்றிடுவாய்!
நிறங்கள் மாறும் நிலத்துக்குள் சுரங்கள் மாறா திருக்குறளே!
வரங்கள் பெற்றே திகழ்வாயே...

சு.சிவசுப்பிரமணியன்.
புதுச்சேரி.

# திருக்குறளில் கல்வி!

திருவள்ளுவன் உலகின் தமிழ் முதல்வன்
அவன் படைத்த அதிகாரங்களில் கல்வியே முதன்மை
அதுதான் அவரின் முதல் தன்மை
முப்பாலில் கல்வியே வென்றது அவருடைய் அறின்சிறப்பால்
உயிரினங்களில் உயர்வாக பெற்றது கல்வியே
அக்கல்வியே அனைவருக்கும் முதன்மை
கற்க கசடற என கற்பித்த முதல்வன்
கல்வி கற்காதவன்
இரண்டு கண்களிருந்தும்
பார்வையில்லா புண்கள் கொண்ட மூடனே
அவருடைய
அதிகாரங்களில்
கல்வியை கற்றால்
அனைத்தையும் பெற்ற பேரானந்தம் அனைவருக்குமான.
ஊட்டிய சீடனே
கற்க கசட கற்று அதன் வழி நின்றால் உலகே போற்றும்
இல்லையேல்
அறிவில்லாதவன்
ஊரே தூற்றும்
பார்க்க கண்கள் இருந்தும் கற்காதவன் கண்கள் வெறும் புண்களே
திருவள்ளுவர் எத்தனை அதிகாரங்கள் எழுதியிருந்தாலும்
கல்வி கற்றோரே
அதை படித்தணர முடியும்
அக்கருத்துகளால்தான்
மனிதனின் வாழ்வு விடியும்

மருதூர் மாமு

# திருக்குறளில் அறம்

ஈரடியால் உலகை அளந்திட்டத் திருமகனே
பொதுமறையால் உலகை இணைத்திட்டப் பெருமகனே
பண்பாட்டில் வாசம்செய்து பண்பட்டத்தேசம் செய்ய
முப்பாலில் தப்பாமல் முன்வைத்தாய் அறத்தினையே

சிறப்பையும் செல்வத்தையும் ஒன்றாக ஈனுமென்ற
அறத்தையே நீ அடிதோறும் வைத்தாயன்றோ?
ஆழ்கடலின் முத்தாக நன்னெறிகள் சேர்த்தெடுத்து
அண்டமொழி அத்தனையும் மொழி பெயர்த்திடவே

அறத்துக்கேப் புடம் போட்டு அன்பென்னும்
வடம்போட்டு இறைநிலைக்குத் தடம் போட்டாய்..!
புறம்பாக நடைபோட்டால் புகழ் என்றும்
கிடைக்காது என்றே நீ புரியவைத்தாய்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழென்றே
கேட்டாலும் அறத்திற்கே வழி சொன்னாய்
குடிமக்கள் நலத்திற்கே ஒளி தந்தாய்..!
பொருளுக்காய் நீ தந்த குறள் எழுநூறு

என்றாலும் உனது குரல் ஒலித்ததெல்லாம்
அறம் கூறும் நல்லுலகை அமைக்கத்தானே?
மத்தாலே கடைந்தாலும் மாநிலமே பிளந்தாலும்
அறத்தின் வழிவந்த பொருள் தருமின்பமே

பேரின்பம் என்று வரிதோறும் விரித்துரைத்த
வான்புகழ் வள்ளுவனே எங்கெங்கு காணினும்
உந்தன் வாயுறை வலியுறுத்துவது அறம்
என்னும் அரணே என்றால் மறுப்பாருண்டோ?

எம். ஆர். ஜெயந்தி
தஞ்சாவூர்

# வள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறி! காதல்!

முத்தமிழில் வள்ளுவமே வேதம் ஆகும்!
மூன்றாம் பால் முக்கனியின் இனிமை சேர்க்கும்!
முத்தாக வள்ளுவனார் காட்டும் காதல்!
முத்தாய்ப்பாய் வையகத்தார் மனதை ஈர்க்கும்!
தித்திக்கும் காதலிலே பெண்ணின் கண்கள்!
திகட்டாத விருந்தாகும் மாமருந்தும் ஆகும்!
எத்திக்கும் வழிநடத்தும் காந்தக் கண்ணை,
இவர் போல எவர் உரைத்தார் இலக்கியத்தில்!
எனைப் பார்த்தாள் நாணத்தால் தலைகுனிந்தாள்!
இது காதல் பயிருக்கு பாய்ச்சும் தண்ணீர் என்றார்! இன்று!
தினையேனும் காதலிலே நாணம் எங்கே!
தெருவெல்லாம் அறைக்காதல் நடக்குமிங்கே!
கண்ணொடு கண் நோக்கின் வாய்ச்சொல் இல்லை!
கவனித்தீரா? வள்ளுவனின் வார்த்தை ஆழம்!
பெண்ணுக்கே கற்புநிலை கொள்ளாக் காலம்!
பிறன்மனை நோக்காப் பேராண்மை சொன்னார்!
திருமாலின் திருவடியை விடவும் மேலாம்,
காதலியின் மென்தோள் சாய்ந்திருத்தல் என்றார்!
உரைக்கின்றார் அனிச்சம் பூ மென்மை தோற்கும்!
உள்ளத்தால் பெண்மகளின் மென்மை என்பார்!
நிறைவான காதலினை அழகாய் சொன்ன,
நீடுபுகழ் வள்ளுவர் போல் எவரும் உண்டோ!
வள்ளுவனின் வாழ்க்கைநெறியை மனதில் வைப்போம்!
வாழும்வரை காதலினை உயிர்மூச்சாய் காப்போம்!

சுகுமாறன் கந்தையா,
புதுக்கோட்டை.

# திருக்குறளில் காதல்

என் மனைவியின் பற்களிடையே ஊறிய நீர்
பாலோடு தேன்கலந்த சுவைதானே!.
உயிரும் உடலும் எப்படி பிரியதோ
அப்படியே நானும் என் மடந்தையும்.

என்னவள் என் கண்ணுக்குள் வீற்றிருக்க இடம் போதவில்லை
கருமணிக்குள் இருக்கும் பாவையே! நீ போய்விடு !.
ஒளிகொண்டிருக்கும் விழிகளையுடைய
அவளை மறந்தால்தானே நினைப்பதற்கு.

கண்ணுக்குள் அவர் குடியிருப்பதால்
எங்கே!மைதீட்டினால் மறைந்துவிடுவாரோ எனபயந்து
மைதீட்டாமலே வாழ்ந்து வருகிறேன்.

என்னவர் குடியிருப்பது எனது நெஞ்சமென்பதால் -சூடாக
உண்டால் சுட்டுவிடுமோ என்பதால் உன்னைக்கூட
பயப்படுகிறேன்.

என்னைத் தவிர யாரும் அறியவில்லை என்பதால் - எந்தன் காதல்
தெருவிலும் மயங்கி திரிகின்றது.
காதல் நோயின் துன்பமரியா மக்கள் நகைக்கிறார்கள் - காதல்
உணர்ந்தால் எப்படி வரும் இந்த நகைப்பு.
யார் எப்படி உரைத்தாலென்ன
அவர்களின் பழிச்சொற்கள் எருவாகவும்
தாயின் தடைச்சொல் நீராகவும் கொண்டு
என் காதல் வளருமே தவிர
ஒருபோதும் கருகிப்போய்விடாது.

முனைவர் சா. சே. ராஜா

# திருக்குறளில் காதல்

தேன்மதுர சொல்லாள் சொல்லால்உருவாகும்
உமிழ்நீரே பாலோடுத் தேன்கலந்தசுவையாகுமே
கண்ணின் கருவிழிக்குள் குடியிருக்கும் பாவையே!
தயவுடனே வேண்டுகிறேன்
விழியினின்றும் வெளியேறிடு!

பிறை நிலவை நுதலாய்சூடிய
என்னவளுக்கு குடியிருக்க இடம்வேண்டுமே!
கதிரனையக் கண்ணாள் தனதுக் கண்ணால்
பொருதியே வெல்லும் பொன்னனையபெண்ணாள்
ஒருநொடி மறந்தாலுமே மறு நொடியில்
நினைவுக்குள் வந்திடுவாளே

ஆயினும் மறந்தாலன்றோ
அவளை மீண்டும் நான்நினைப்பதற்கு!
அவளோடுக் கூடுகிற நேரத்தில் சொர்க்கத்தின்
சுகம்அடைவதும் அவளென்னைப் பிரியும்போது
உடலை விட்டு உயிர் நீங்கும்போது
அனுபவிக்கும் கொடுந்துயராய் தோன்றுகிறதே!

காதலில்லா உலகமதில் வாழ்வதிலும்
எவ்விதப் பொருளில்லையே!
காதலென்ற ஒன்றப் பொருளன்றி
உலகில் உயர்ந்தப்
பொருளும்வேறில்லையே!

ரேணுகா சுந்தரம்

# திருக்குறளில் இறைமை

எல்லா எழுத்துக்கும் முதலாம்... அகர ஒலியே போற்றி...
எல்லா உயிர்க்கும் முதலாம்... ஆதி பகவனே போற்றி...
தூய அறிவுவடிவானஇறைவன் திருவடியே போற்றி...
கற்ற கல்வியால் விளையும் பயனே போற்றி...

அன்பரின் மனமலரில் வீற்றிருக்கும் இறைவா போற்றி...
புகழ்வாழ்வு பெற்றுநெடுங்காலம்நீடு வாழ்வோம்போற்றி...
விருப்பு வெறுப்பில்லா இறைவன்திருவடி போற்றி...
எவ்விடத்தும் எக்காலத்துக்கும் உயிர்க்கு துன்பம்போம் போற்றி...

மெய்ப் பொருள் சேர்ந்த புகழுடையஇறைவா போற்றி...
நல்வினை தீவினைஎனும் இரண்டும்நெருங்கிடா போற்றி...
மெய்வாய் கண்மூக்கு செவியென்னும்ஐம்பொறியின் வழிவரும்...
ஊறு சுவை யொளிஓசை நாற்றமென்னும் ஐந்தின் கண்ணும்
ஆசை அறுத்தான்போற்றி...

மெய்யான ஒழுக்கநெறிநின்று நெடிதுவாழ்வோம் போற்றி...
ஒப்பாரும் மிக்காருமில்லா இறைவன்திருவடி யொற்றி போற்றி...
அல்லார் மனத்தின்கண்அஞ்ஞானம் தீர்ப்பாய் போற்றி...
அறக்கடலாய் விளங்கும் இறைவன் திருவடி போற்றி...

பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்போம்போற்றி...
எண்குணத்தான் இறைவன் திருவடியை
சிரம்தாழ்த்தி வணங்குவோம் போற்றி...

இறைவனின் இணையடி பொருந்தி நின்று
பிறவிப் பெருங்கடலைகடப்போம் போற்றி.

துரைராஜ்.
ஆடுதுறை.

# திருக்குறளில் இறைமை

அஞ்சிடாத படைகொண்டு ஆட்சிசெய்யும் அரசனுக்கு
அஞ்சாமல் குடிமக்கள் அமைதியாக வாழ்வதிலும்
செங்கோலால் நீதிசெய்து சிந்தனையில் மன்னனாலே
எங்கெங்கும் மும்மாரி எந்நாளும் பொழியுமென்றார்

அறமுணர்ந்த அறிவுடையார் அறிவுரையைக் கூறவல்லார்
மறம்நிறைந்த போர்ப்படையால் மக்களையும் காப்பவனும்
அஞ்சிடாத மனங்கொண்டு அறிவார்ந்த செயபுரிந்து
அஞ்சிடாத அமைச்சர்கள் அரசனுக்குத் தேவையென்றார்

கொடையளித்து அருள்செய்து குடிகாக்கும் அரசனையும்
உடையளித்து வாழ்பவரே உலகத்தில் சிறந்தவரே
குறையில்லா சொல்லாலே குற்றமில்லா ஆட்சியினை
நிறைவான குடைநிழலில் நேர்மையான பண்புயென்றார்

காட்சிக்கு எளியவனாய் கடுஞ்சொல்லைச் சொல்லாமல்
ஆட்சியினை நடத்துபவன் அகிலத்தில் புகழ்பெறுவார்
பொருளீட்ட வழிகண்டு பொருளெல்லாம் சேர்த்துவைத்து
பொருளெடுத்துப் பகுத்தளித்து போற்றுகின்ற அரசனாவார்

சொல்வன்மை நல்லமைச்சர் சோர்வில்லா வினைத்தூய்மை
நல்லரணாய் வல்லவனாய் நாடுகாக்கும் வீரனாக
போர்முனையில் எவர்வரினும் புறமுதுகு காட்டாமல்
போர்செய்து மடிகின்ற போர்வீரன் வேண்டுமென்றார்

கொடுங்கோன்மைபுரியாமல்குறிப்பறிந்துநடப்பவனும்
கடுஞ்சினத்தில்அறிவிழந்துகண்துஞ்சாஒற்றவனும்
பகைகொண்டு அழித்தாலும் பாழடைந்துபோகாமல்
மிகையான கல்வியாலேமீட்டெடுத்தல்அழகென்றார்

கவிஞர் வீக பொன்னையா

# திருக்குறளில் இறைமை

காலங்காலமாக காலங்காலமாக போற்றும் நூல்
சங்க இலக்கிய முதன் நீதிநூல்
வாழ்வின் களஞ்சியமான முதல் நூல் ஞாலம் போற்றும் முதல் நூல்
பாமரனின் அன்றாடம் ஒழுக்க நெறி
உயிரினமே போற்றி காக்கக் கூடிய; மனிதனின்அறம் பொருள் இன்பம்;
இம்மூன்றின் முதன்மை நெறி மற்றும்
பொருளை உணர்த்தியவரே
நம் சமூகத்தில் உள்ள காலங்காலமாக
காலங்காலமாக மரபு நடை முறையை உணர்த்தி யவரே
புலால் விட சைவ உணவே
சிறந்தது மிகச் சிறந்த மருந்தே
இது வள்ளுவரின் கருத் தே
வாழ்க்கை ஒரு வட்டம் அல்ல
மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது
மனிதனுக்கு ஒரு புதுமையான ஆன்மீகம்!
அறத்தை நமக்கு வள்ளுவம் அளித்தது
வள்ளுவம் பெரிதாக இறைவனை நம்புகிறது
கொடையை பற்றி வள்ளுவம் கூறுகிறது
பிறன்மனையையும் நயத்தலையும் பரத்தையர் உறவையும்
பெருங்குற்றமாகச் சொல்லி அன்பு உடைய
காமத்தைச் சமுதாய அறமாக கூறுகிறது
காலம் போற்றும் நூலாக வள்ளுவம்
வள்ளுவத்துக்கு பதின்மர் உரையே
சாலச் சிறந்தது பரிமேலழகர் உரையே
சிறப்பு நூல் நயம் காட்டுதே
வள்ளுவமே தமிழ் அன்னையின் உயர்நிலை
சிறப்பே போற்று வார் தேரூரார்
தென் குமரியில் இருந்து நம்
நாட்டின் தலைநகர் வரை போகிறதே
திருக்குறள் தொடர்வண்டி யே விரைவான்
வள்ளுவத்திற்கு எழுந்த புகழ் மாலையே
திருவள்ளுவ மாலை சிறப்பான நூல்நயம்

புலவர். தியாகு. சோமு

# திருக்குறளில் இறைமை

வள்ளுவன் வகுத்தரிகளின் சிறப்பின்
வார்த்தைகள் ஒவ்வொன்றும்வாழ்க்கையின் வழிகாட்டியாய்..
நெறிகள் தவறாநீதியின் வழித்தோன்றலாய்
நெய்திட்டநற் குறளிலேஇறைமையின் சிறப்பும்..

படைகுடிகூழ் அமைச்சுநட்பரண் ஆறெனச்
செப்பிய வார்த்தையுள்ளேசிறப்பின் இறைமாட்சியே
அஞ்சாமை ஈகம்அறிவு ஊக்கமென நான்கும்
என்னாளும் வேந்தர்க்குஇயல்பு என்றான் வள்ளுவனும்..

தூங்காமையோடு கல்வி துணிவுடமை எனமூன்றும்
நீங்காதார் வாழ்வில்நிலந்தனை உடையவர்க்கென.
அன்றே வகுத்தநல்ஆயிரத்து முன்னூற்றிமுப்பது
அவைக்குறளுள்ளே புதைத்தேவைத்துள்ள இறைமையின் மாட்சிமையே..

கொடையளி செங்கோல்குடியோம்பல் என்று
நிலையுணர்ந்து புலவன்நெய்திட்ட திருக்குறளில்
சொற்பொறுக்கும் பண்புடை வேந்தனாய் வள்ளுவனும்
சொல்லியே வைத்தநல்சொற்களின் சிறப்பும்..

ஏற்றமாய் வாழ்வின்ஏற்றம் கொண்டுதொழ
போற்றிய குறளில்பெருமையும் இறைமாட்சியே.
இருள்சேர் இருவினையும் சேராஇறைவன் புகழ்சேரானென்று
ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுகபுகழோடு இறைமையின் புகழினை..

திருக்குறளில் இறைமைதிருவள்ளுவன் வாக்கினுள்ளே
திருநாமாய் திளைத்தியிருக்கும்திருவள்ளுவன் புகழோடு ...
பிறவிப் பெருங்கடல்நீந்துவர் நீந்தார்இறைவன் திருவடி சேராதார்
என்றே இறைமையின் நிலையுரைத்தோனே திருவள்ளுவரே

ஈழவன் தாசன்

# திருக்குறளில் அன்பு

வள்ளுவப் பெருத்தகை வகுத்த வாழ்வியல் நெறியில்
அன்புக்கு அதிகாரம் கொடுத்தார்
பத்து முத்தான குறள்களில் விளங்க வைத்தார்

அன்பு நல்உள்ளத்தில் சுரக்கும் ஊற்று
அன்பால் பெருகி பொங்கிடும் இன்பம்
அரவணைத்து ஆதரவாய் உதவிடும்
கரங்கள் அன்பு அறனும் பண்பும் தரும்

அன்புடையார் அறிவுடையார்
ஆக்கமும் ஊக்கமும்முடையார்
அன்பால் தன்நலம் கருதாது
பொதுநலம் பேணிக் காப்பார்

அன்பே உயிர் உள்ள உடல்
அன்பிலார் எலும்பும் தோலும்போர்த்திய வெற்றுடம்பு
அன்பால் அகிலத்தைக் கை கொள்ளலாம்
அன்பு ஈடு இணையில்லா பெருஞ்செல்வம்

இரக்கமும் ஈகையும் உண்டுஅறத்திற்கு அன்பு துணை
வீரத்திற்கும் அதுவே துணை
அன்பிலார் வாழ்க்கை பாலையில்
பட்ட மரம் துளித்து கருகும் அவலம்

உடம்பின் அகத்து உறுப்பு அன்பே
மற்றவை பயனிலில்லா பாகங்கள்
அன்பு இல்லாத உடலை அறம்
வருத்தும்அன்பும் அறனும் சிறந்து அமைவதே
இல்வாழ்க்கைக்கு பண்பும் பயனும் தரும்.

தீனதயாளன் ராமசாமி.

# திருக்குறளில் அன்பு

அறத்திற்க்கே அன்புசார் பென்ப அறியார் மறத்திற்கும் அஃதேதுணை.

தர்மத்துக்கு அடிப்படையாக அமைவது அன்பு
இது அறியாதவர்கள் ஆராய்ந்து பார்த்தால்
மனிதனிடம் வீர உணர்ச்சி தோன்றுவதற்கும்
அன்பு காரணமாக இருப்பது புரியும்
தர்ம காரியங்களைச் செய்வதற்க்கு அன்பு துணையாகிறது
அறிந்த விஷயந்தான்
ஆனால் சில சந்தர்ப்பங்களில் அன்பு
வீர உணர்ச்சிக்கும் காரணமாகி விடுவதுண்டு
நாம் யாரிடம் அன்பு செலுத்துகிறோமோ
அவர்களுக்கு யாராவது கெடுதல் செய்ய முன் வந்தால்
அவர்மீது கொண்டுள்ள அன்பின் காரணமாகக் கிளர்ந்து
எழுந்து அவர்களைக் காப்பாற்ற முயல்கிறோம்
வீர உணர்ச்சிக்கும் அன்பு காரணமாகிறது
மறம் என்ற சொல்லுக்குத் தீமை என்கிற பொருளும் உண்டு
தீமைக்கு அன்பு எப்படித் துணையாகும்
தீய உள்ளம் கொண்டோர் இடத்தும் அன்பு
செலுத்துவதன் மூலம் அவர்களைத் தீயவழியினின்றும்
விலகச் செய்ய முடியுமென்பதால் தீமையை
ஒழிப்பதற்கும் அன்பு துணையிருக்கும் என்றும் பொருள் கொள்ளலாம்
ஆகவே அன்பு தர்ம காரியங்களுக்குத் துணையாக
இருப்பது மட்டுமின்றி வீரத்துக்கும்
தீமைகளை நீக்குவதற்கும் துணையாகும் என்பதில் சந்தேகமில்லை அன்பு

குமரன் அம்பிகா
வாணியம்பாடி

# வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறி அன்பு

ஈரடியால் உலகளந்த வள்ளுவர் புகழ்பாடு-அவர்தந்த
இறவாத புகழுடைய வள்ளுவத்தை நாடு
அன்பென்ற சொல்லில்தான் அழகுண்டு அதைக்கூட்டு-மனித
அடையாளம் அதுதானே உன்பெயரை நாட்டு.

அகத்தினிலே அன்பில்லை எப்போதும் உனக்கு-இயங்கும்
உறுப்பிருந்தும் என்ன பயன்? அது வீணான கணக்கு.
உயிர்வாழும் உடம்பென்றால் அன்பதுவே மூலம்-இன்றிப்
பயிர்வாழாக் களையாக இருந்தென்ன லாபம்?

அன்பதனை அகப்பொருளாய் இலக்கியத்தில் பார்த்தாய்-
அதுவாழ்வு
என்பதனை ஏன்மறந்து கொடூரத்தைக் கோர்த்தாய்.
பட்டமரம் தளிர்க்காது பாலைநிலத்தில் மனிதா-நீ
தொட்டமரம் துளிர்த்திடவே அன்பு என்னும் நீர்தா.

அன்பிருக்கும் மாந்தரைப்போல் புறத்தினிலே நடிப்பாய்-உனை
அறங்கொல்லும் மனம் கொல்லும் புழுப்போலத் துடிப்பாய்.
அன்பு அறத்திற்கு துணைமட்டும் இல்லை-வில்
அம்பெய்தும் வீரமணம் கூட்டவரும் முல்லை.

சிறப்புதரும் அன்பதனை வாழ்வினிலே காட்டு-உனைச்
சிறந்தோரில் செகம் வைக்கும் இது வள்ளுவனின் பாட்டு.
நட்பென்ற உறவதனை நாள்தோறும் பேண-அன்பை நாட்டிவிடு
அவரிடத்தில் நல்லவழி காண.

வாழ்வினிலே பொருந்த வேண்டும் நயமாக அன்பு-அது
உனை தாழாமல் தலைநிமிர்த்தி உயரவைக்கும் பண்பு.
அடைக்கின்ற தாழ்ப்பாளோ அன்பிற்கு இல்லை-அது
துடைக்கின்ற கண்ணீராய் ஊற்றெடுக்கும் பிள்ளை.

ஆயை. மணிமாறன்.
வேதாரண்யம்.

# வாழ்வின் கற்றல்

திருவள்ளுவரின் நெறிமுறை வாழ்வின் முன்னுரை..

அகந்தையும் அழிக்கவும்
உதவி செய்தோருக்கு ஊன்று கோலாகவும்
தீயதை திருத்தவும் நல்வழி நடக்கவும்
ஐயனின் எழுதுகோல் ஆர;ப்பரிப்பு செய்தது
தமிழனின் நெஞ்சிலே உருவமாய் நின்றது
சம்பணமாய் அமர்ந்திருக்கும் சமர்ப்பணமான அவரது குரல்..

திங்களாய் இனித்திடும் வெள;ளியாய் பளிச்சிடும்
பவளமான வரிகள் வைரங்களாய் மின்னடும்
திருவள்ளுவரின் குறலில் தீண்டாமை எரியும்
நாவடக்கம் புரியும் நன்றி மறப்பது தொpயும்
பு+மியில் ஆச்சர்யங்கள் உண்டு
அது திருக்குறள் எழுத்திலே மட்டுமே ஒன்று

ஐயனை போற்றி தேனமுது தமிழை ஊற்றி
நம் தமிழ் மரபில் கலந்திருக்கும்
அனைவருக்கும் எடுத்துகாட்டாய் எடுத்துரைக்கும்
முன் தோன்றிய புலவரும்
ஐயன் திருவள்ளுவரை தினம் நாளும் போற்றுவோம்

சமூக உயரத்தில் சிறப்போடும்
என்றும் திருக்குறள் தனிக்குறள்
திசை நோக்கி பார்பதெங்கும்
திருக்குறளின் வேதந்தமே
வெளிச்சமாய் தொpயுது
திருவள்ளுவனின் எழுத்தானி நம் தமிழ்
எழுத கற்று தந்ததே ஐயனின் அச்சாணி

க. சந்திரமோகன்.
ஓரத்தநாடு

# வள்ளுவர் காட்டும் அன்பு

அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ?
அடைத்தால் பெருகும் நீர் அன்றோ?
உடலின் அழகே உயிரில் தான்,
உயிரின் அழகே அன்பில் தான்...

அறததின் அருமை வீரப்பெருமை,
எளிதாய் சொன்னது குறள் ஒன்றே...
எலும்பிலாப்புழு வெக்கையில் வேகும்,
அன்பிலா மனிதம் வெறுமையில் சாகும்,

உண்மை உணர்த்தியது குறள் அன்றே...
அன்பின் உறைவிடம் நிறைகுடமே,
மறுப்போர் உடல் வெறும் வெற்றிடமே...
குடிசைக்குள் சென்ற குறள், வள்ளுவனால் நின்ற தமிழ்...

முப்பாலில் பொழிந்த மழை ,
அன்பாலே நமை இணைத்த இழை...
அன்பின் மொழியை தமிழாய் மாற்றி,
அருவி கொட்டியதும் திருக்குறளே...

அன்புச்சோலை இல்லா வாழ்க்கை என்றும்,
எவர்கும் பொருந்தும் பாலைதான்...
உரக்கச் சொன்னது வள்ளுவரே...
தொன்மை தமிழில் உண்மை உணர்த்தி,
பெருமை அன்பை பேசியதே...
அன்புடைமை என்ற பொதுவுடைமை,
அதுவே குறளின் சிறப்புடைமை!

கவிஞர் சந்திர சேகர்
இராஜபாளையம்.

# அன்னை தமிழே வாழி

அகமும் புறமு மழகாய் நின்று
குகனி னன்பிற் குவலயம் வென்று
சிலம்பின் கதையில் நீதியைச் சொல்லித்
திலக மெனவே திகழுந் தமிழே
உலகி லுனைப்போ லுயிர்மொழி யேது
கன்னித் தமிழே கனியுந் தமிழே
உன்னைத் தொழுதே உயர்வேன்
இன்றமிழ்த் தாயே இளந்தமிழ் வாழி!

எழுகதி ரெனவே யெங்கட் கான
வுழுநில மேயெங்க ளுத்தமத் தாயே
யழுகுரல் வருமுன் னார்த்தெழுங் கடலே
கெழுதகை நட்பெனுங் கிழத்தியும் நீயே
செழுமொழியானவென் செந்தமிழ்ச் சேயே
தழுவலைத் தவிர்த்துத் தனிப்பெரும் மொழியா
யெழுமென் மொழியே இறையே
தொழுதெழு வோமுனைத் தொல்தமிழ்த் தாயே

அருமருந் தாயெனக் கானவள் நீயே
பெருமகிழ் வேயென் பேரொளி நீயே
வொருபெருந் தனிமொழி யாகிநிற் பாயே
தருநிழல் போலெமைத் தாங்கிடும் தாயே
யெருவென வெங்கவிக் காகியத் தேனே
கருமுகி லன்ன கவிமழைப் பொழியு
மொருபெருந் தாயே வொண்டமிழே
யருள்தரு தேவி யடிபணி வேனே

அரியவென் றாயே அறிவுமென் றாகி
யெரிதழற்கொண்டேயெதிரியை வெல்லுந்
திறன்மிகுந் தாயே தெய்வமும் நீயே
அறவழி நிற்போ ராயுத மாகி
நெடுவழி நின்று நேர்மைத் திறத்தால்
தடுப்பரை வென்று தரணியி
லுடுக்களி டையொளி ருறுமீன் வாழி!

இராம வேல்முருகன்
வலங்கைமான்

# அன்னைத்தமிழே வாழி

ஆசிரியப்பா

தன்னே ரில்லாத் தமிழே தமிழர்
தன்மா னத்தைக் காத்திடும் தமிழே
அன்னை மொழியே அமிழ்தே எங்கள்
அன்பிற் சிறந்தவெம் மழியாப் புகழே!

எம்மொ ழிக்கும் பகையில் மொழியே
நம்மொழி யாக நாட்டில் திகழும்
எம்மருங் குள்ளவர் ஏற்றிப் புகழும்
செம்மை மிகுந்த செந்தமிழ் வாழி

என்றுபி றந்தவள் என்றுணர்ந் தேசொல
இன்றுவ ரையிலும் இயற்றுமே போனவள்
பன்னூறு கோடியே பைந்தமிழ்த் தாயவள்
நின்றுவி ளங்கென நிமிர்ந்து நின்றாளே

கண்ணினைக் குத்திடும் காரியம் கண்டுமே
வண்டமிழ் வாடிட வாழ்வினை பாவலர்
கொண்டிட விட்டிடோம் கொடுவாள் கொண்டு
கண்டனர் போர்க்களம் கலங்காது வெல்ல

எத்தனை யோயிடர் இத்தரை மீதினில்
முத்தமிழ்த் தாயவள் முன்வந்தெ திர்த்திட
அத்தனை யும்பொடி ஆக்கியே வென்றவள்
நித்தியம் வாழ்கென நிலைக் கொண்டாலே

ஆழியின் பேரலை யாலுமே அழிந்திடா
ஊழியே ஆயினும் உயிர்த்திடும் வண்டமிழ்
வாழியே என்றுநாம் வான்முகம் தூக்கியே
மொழியாம் செம்மொழி எம்மொழி கொண்டதே

முனைவர் பெ. பாரதி ஆறுமுகம்
பெரம்பலூர்

# அன்னைத் தமிழே வாழி

ஆசிரியப்பா

சங்கத் தமிழே சமுத்திரக் கடலே
மங்காப் புகழின் மகத்துவ மொழியே
எங்கும் தமிழே எதிலும் தமிழே
அங்கம் தன்னில் அமுதே வாராய்
செந்தமிழ் மொழியே செழுமையின் அமுதே
விந்திய மலையின் விண்மீன் ஒளியே
சந்தம் தொடுக்க சங்கதி தாராய்
உந்தன் புகழை உணர்வாய் பாட
கல்லும் மண்ணும் காணா முன்னே
சொல்லும் பொருளும் சொன்ன மொழியே
தொல்லியல் ஆய்வுகள் தொன்மை கூறுமே
எல்லை யில்லா ஏழிசை தமிழே.
வள்ளுவர் தந்த வான்புகழ் குறளும்
பள்ளுப் பாட்டும் பாவலர் கூற்றும்
உள்ளும் புறமும் உணர்வாய் கொண்ட
தெள்ளு தமிழே தேன்தமிழ் மொழியே..
அகத்தியம் கண்ட அன்னை மொழியே
அகபுற  வாழ்வை அழகாய்த் தந்தாய்
நிகழ்வு யாவிலும் நீயே நிகண்டாய்
புகழும் பெற்றாய் பூமியில் நிலைத்தாய்..
பொதிகை மலையில் போகர் உறையில்
பதிகம் கண்ட பாயிர மொழியே
மதிநுட் பமாந்தர் மாமுனி சித்தர்
உதிர்ந்த சொல்லால் உன்புகழ் ஓங்குமே...

தங்கை பாலா ஆசினி சேந்தன்குடி
புதுக்கோட்டை...

# அன்னைத்தமிழே வாழி

( எண்சீர் விருத்தம் ) (காய் மா காய் தேமா)

முத்தமிழே தாயே மூத்தவளும் நீயே
மூவுலகை யாளும் என்னுயிரும் நீயே...!
தித்திக்கும் தமிழே திகட்டாத தேனே
தினந்தினமும் உன்னை சுவைத்திடுவேன் நானே ...!
முத்தமிட்டு உனையும் உச்சிமுகர் வேனே
முந்திவந்து தானே முழுமனதாய் நானே....!
சத்தமிட்டே உறைப்பேன் தாயேநீ வாழி
சாதனைகள் படைக்க கரம்கொடுப்பாய்த் தோழி...!
அஞ்சாது வருவாய் அகிலமெல்லாம் நீயே
அன்னையாக வந்து காத்திடுவாய் தாயே...!
வஞ்சமில்லா தாயே வண்டமிழாய் நீயே
வண்ணமாகப் பாவும் தருவாயே தாயே...!
கொஞ்சிடுவேன் உன்னை குழந்தையாகத் தானே
கொதித்தெழுந்து காப்பேன் என்றென்றும் நானே...!
எஞ்ஞான்றும் போற்றும் ஏற்றமிகு தாயே
இயற்றமிழாய் இயங்கும் இன்னிசையும் நீயே ...!
செந்தமிழே தாயே தென்றலென வந்தாய்
செழுமையுடன் நின்று தெம்மாங்கு தந்தாய்...!
வந்தோரை வாழ வைத்திடுவாய்தாயே
வளமான வாழ்வும் தந்திடுவாய் நீயே...!
அந்தமில்லா வந்த மொழித்தாயே வாழி
அகிலமெல்லாம் வாழும் என்னன்னை வாழி...!
சொந்தமென வந்தாய் சொர்க்கமதைத் தந்தே
சொத்தாக நின்று சொக்கவைத்த தாயே...!

ஜோதிபாஸ் முனியப்பன்

# அன்னைத்தமிழே வாழி

(எண்சீர் விருத்தம்)

அமிழ்தான தேன்மதுரத் தூயவளின் வாழ்த்தில்
அடங்காத அன்பினிலே தாங்கிடுவாள் வாழ்வில்
தமிழ்தானே வான்முகிலாய்த் தாயெனவே வாழும்
தடங்காட்டித். துள்ளலிலே தாண்டவமாய் ஆடும்
உமிழ்ந்தாலே உண்மையிலே உன்னதமும் இணைந்தே
உயர்வான உட்கருத்தில் ஊக்கங்களில் உலவும்
சிமிழ்தாங்கும் சிந்தனையில் சிற்பமாகும் சிறப்பாய்

வாழும்கலை பாடமாக்கி வைகறையாய் வந்தாள்
வாழ்ந்திடவே வையகமும் வானுலகும் நின்றாள்
தாழும்நிலை வாராமல் தண்மையைத்தான் தந்தாள்
தங்கமெனத் தாங்கியவள் தனித்தன்மை கொண்டாள்
வீழும்வகை வேண்டினாலும் வேலியாவும் உள்ளாள்
வீழ்த்திடுமோ வஞ்சமாக வெட்டிடலா மொன்றாய்
பாழும்பட விட்டிடாது பாதுகாத்துப் பரிவில்
பார்த்திடுவோம் திண்மையிலே பைந்தமிழை அமுதாய்

வானுலகும் வாழ்த்திடவே வாழியவே நீயே
வசந்தங்கள் வாசலாகும் வாய்ப்பளித்து தாயே
தேனுலாவுந் தீந்தமிழே தேவதையாய் சேயே
தேடிவரும் செல்வமாய் திக்கெட்டும் தீயாய்
ஊனுடனே உள்ளமுமே ஊற்றினிலே துள்ள
ஓங்கிடுமே இன்பமுமே உற்சவத்தில் தமிழே
கானுலாவும் காற்றிடையும் கன்னியுந்தன் காதல்
கண்கவர்ந்து காத்திருக்கக் கனிந்திடுமோ நாளே

உஷாதேவி பார்த்தசாரதி

# அன்னை தமிழே வாழி!

(கலிவிருத்தம்)

தொல்லுல கோம்பிடும் தொகைத்தமிழ் வாழி!
எல்லையில் வானென எழுந்தமிழ் வாழி!
வல்லின மெல்லிடை வகைத்தமிழ் வாழி!
இல்லையென் றோதிடா இறைத்தமிழ் வாழி.!!
கண்களில் நல்லொளிக் கவிண்தமிழ் வாழி!
விண்ணிடை மீனென வியன்தமிழ் வாழி!
பண்ணொடு நல்லிசை  பயில்தமிழ் வாழி!
தண்ணொடு நீள்பிறைத் தகைத்தமிழ் வாழி!!
செங்கதிர் தோற்றிடும் செழுந்தமிழ் வாழி!
பங்கயத் தோன்றலெம் பயில்தமிழ் வாழி!
அங்கம தேந்துயிர் அணித்தமிழ் வாழி!
பொங்கிடும் மாக்கடல் பொதித்தமிழ் வாழி!!
இன்னுயிர் யாவிலும் இணைத்தமிழ் வாழி!
பொன்னுடன் பூமணிப் பொலித்தமிழ் வாழி!
கன்னியர் கண்களின் கணைத்தமிழ் வாழி!
அன்னியம் வென்றிடும் அருள்தமிழ் வாழி!!
ஏரினில் வாழ்ந்திடும் எழிற்தமிழ் வாழி!
நேரிய நற்சிலை நெளித்தமிழ் வாழி!
கூரிய அம்பெனக் குறித்தமிழ் வாழி!
மாரியாய் நற்பொழில் மலர்தமிழ் வாழி!!
முத்தமிழ் வேந்தரின் முறைத்தமிழ் வாழி!
வித்தென வீரமே விதைத்தமிழ் வாழி!
பித்தென அன்பரை பிணித்தமிழ் வாழி!
கொத்தெனக் கொய்திடும் கொளுத்தமிழ் வாழி!!

கண்ணதாச முருகன்

# அன்னைத் தமிழே வாழி!

(கட்டளைக் கலிவிருத்தம்)

மன்றில் நடஞ்செயும் மாநட ராசர் மகிழ்ந்துமுன்னாள்
ஒன்றும் விடாமல். உயர்திரு வாசகப் பாடலெல்லாம்
அன்றே எழுதி அமைந்தன ராயின் அருந்தமிழ்நீ
என்றும் புவியில். இளமை திகழ இருப்பையன்றே.

தொடுக்கும் கவிதை தொடைநயம் ஓங்கிடத் தும்பிகள்வாய்
மடுக்குமத் தேனென மக்களின் நாவில் மலிந்துமிக
அடுக்கும் வகையில் அதுதான் அமைய அருள்தருவாய்
ஒடுக்கும் புவனம் ஒழியினும் ஒல்கா உயர்தமிழே!

பன்னாள் எனையே பரிந்தழைத் தானிவன் பார்க்கில்யான்தான்
இந்நாள் செலவே இசைந்திட வேண்டும் எனச்சிவனார்
அந்நாள் அரசர்க் கருளிய வாறுபோல். ஆதரவாய்
எந்நாள் எனைவந் தடைகுவை யோயென் இருந்தமிழே!

பிள்ளைத் தமிழில் வருகைப் பருவம் பெருவிருப்பாய்
உள்ளி உனையே ஒருபா எழுதும் உணர்விலியாம்
எள்ளத் தகுமிச் சிறியேன் தனையும் இயல்பறிந்து
தள்ளித் தயவாய் வருவாய் எனது தமிழ்அனையே!

பிறமொழி தன்னை எதிர்த்திடும் நின்னுடைப் பிள்ளையெலாம்
வெறும்மொழி ஆரவா ரந்தான் விளைப்பர் வியனுலகில்
செறுமொழி யாம்உனைச் செம்மையாய்க் கற்றிடச் சிந்தைசெயார்
உறுமொழி எத்தால் இதனையான் சொல்ல ஒருப்படுமே!

தித்திக்கும் சொற்கள் தெளிந்த இலக்கணம் தேடிடினும்
எத்திக்கும் இல்லை எனும்புகழ் கொண்ட இனியமொழி
நெத்திக்கும் கண்ணுடை நின்மலன் இன்னருள் நல்கிடநான்
சத்திப்பேன் அன்னைத் தமிழேநீ என்றைக்கும் வாழியென்றே!

குஞ்சித. சுகுமார்

# இனிதாம்தமிழ் இதுயெம்முயிர்

(வஞ்சித்துறை)

பழந்தூய்மொழி பயில்தேன்மொழி!
பலநன்னெறி உரைமாமொழி!
நிழலாய்யிரு நெடுநாள்வெகு
நிலையாய்ப்புகழ் நிறைகொள்தமிழ்!
இயலோடிசை இனிநாடகம்
எனமுத்தழிழ் உடைசெம்மொழி!
நயமாயிள நடையோடிரு
நலமோடுயர் நனிநற்றமிழ்!
அகத்தோடுடை புறமாகவே
அழகாகவே புவிவாழ்வினை
நிகழ்பாடுடன் வகுத்தாக்கிய
நெறியாள்கிற நிலம்வாழ்தமிழ்!
உயிர்ப்போடிரு உயர்செம்மொழி!
உலகாண்டிடும் ஒளிர்வொண்மொழி!
பயில்தொல்மொழி படைகொள்தமிழ்!
பலவாய்மொழி படைத்தாயிவள்!
பொதுமாமறை திருவாம்குறள்!
புகழ்தானுடை திருவாசகம்!
மதுவாய்யினி மணிமேகலை!
மனதிருசிலப் பதிகாரமாய்
கலையாளுமை நிறைகாணுமே
கவிகம்பனின் இராமகாதை!
நிலையாயுயர் குயில்பாரதி
நிலம்வாழுமே தமிழ்மாமொழி!

பொ. முத்துராக்கு

# அன்னைத் தமிழே வாழி!

(குறளடி வஞ்சிப்பா)

ஆதிமுதலாய் அன்னைமொழியாய்
நீதிவழுவா நிலைத்ததமிழே!
மூலமொழியாய் மூத்தமொழியாய்
ஞாலமொழியாய் வாய்த்ததமிழே!
வேளாண்மையும் மேலாண்மையும்
தாளாண்மையால் தந்ததமிழே!
பாராண்டதும் பாவாண்டதும்
வேரானதும் நீயல்லவா?
வாழும்நெறி வளரும்கலை
சூழுமறிவின் தாயல்லவா?
மூவேந்தரின் மகளல்லவா;
பாவேந்தரின் மூச்சல்லவா?
தேன்சிந்துமே உன்னிலக்கியம்
வான்மிஞ்சுமே உன்னிலக்கணம்
உன்னைவீழ்த்திட உலவும்நரி
நன்மைசெய்வதாய் நளினமாடும்
செத்தமொழியின் சீண்டும்பகை
கொத்தாய்வரும் கொடுஞ்செயலுடன்
உலகோர்தொழ ஒருநாள்வரும்
பலநாள்பகை; பணிமுடித்திடு!
என்றும்
தென்றல் காற்றாய் தீண்டும் அறிவே!
உன்னை மறவா எங்கள்
அன்னைத் தமிழே! வாழ்க வாழ்கவே!

அ. தமிழ்மைந்தன்

# அன்னைத் தமிழே வாழி !

(கும்மிப் பாட்டு)

அன்னைத்த மிழ்மொழி வாழிய வேயென்று
ஆனந்த மாய்க்கொட்டிக் கும்மிய டி
கன்னித்த மிழினைப் போற்றிப்பு கழ்ந்துநீ
கைகொட்டி யாடியேக் கும்மிய டி

முன்னைப்ப ழமைக்கும் பின்னைப்பு துமைக்கும்
மூத்தமொ ழியெனக் கும்மிய டி
கன்னல்சு வைதந்தே இன்னலைப் போக்கிடும்
அன்னைத்த மிழென்றுக் கும்மிய டி

வண்ணப்ப டைப்பினை எண்ணத்தி றனதை
வாழ்த்திப்பு  கழ்ந்திடக் கும்மிய டி
மண்ணின்பெ ருமையை மாசில்பு துமையை
மாண்பினைப் போற்றிடக் கும்மிய டி

சந்தமி சைத்திடச் சிந்துமொ லித்திடச்
சுந்தரத் தாயவள் கும்மிய டி
செந்தமி ழாமிது செம்மொழி யாமிது
அந்தமி லையெனக் கும்மிய டி

பெண்மையைப் போற்றும்த மிழினை வாழ்த்தியே
பேரும்வி ளங்கிடக் கும்மிய டி
கண்ணின்ம ணியெனக் காத்திட வேண்டுமே
களிந டமாடிக் கும்மிய டி

வாழிய முத்தமிழ் வாழிய நற்றமிழ்
வாழிய என்றுநீ கும்மிய டி
வாழிய செந்தமிழ் வாழிய பைந்தமிழ்
வாழிய என்றுநீ கும்மிய டி

மு. மணிமேகலை ராஜன்
ஓசூர்

# அன்னைத் தமிழே வாழி !

கும்மிப்பாட்டு

பாடிடும் பாட்டினில் நீதானே - என்றும்
பைந்தமிழ் பாடிடு செந்தேனே.!
கூடிடும் வேளையில் தேனாக - நீயும்
செந்தமிழ் பாடிடு சீரோடு.!

எங்களின் தேன்மொழி நீதானே - என்றும்
பொங்கிடும் பூந்தமிழ் பாநீயே.!
செங்கனி போலொரு சுவையாகி - நிற்கும்
எங்களின் தாய்மொழி வாழியநீ.!

கொஞ்சிடும் எம்மொழி நீதானே - என்றும்
அஞ்சிடும் உன்னிடம் தீயவையே.!
நெஞ்சினில் நின்றிடும் கற்கண்டே - நிதம்
தஞ்சமும் தந்தவள் வாழியநீ.!

ஆடிடும் தோகையின் மீதேறி - அருள்
தந்திடும் ஆண்டவன் நீயன்றோ.!
நாடிடும் மக்களின் குறைதீர்க்கும் - எங்கள்
செந்தமிழ் வாழிய வாழியநீ.!

கங்கையும் வங்கமும் ஒன்றாகி... உன்னை
கண்டதும் பூமியில் அகத்தியனே.!
நங்கையும் என்றுனை நாவினிலே - வெற்றி
நல்கிடும் நற்றமிழ் வாழியநீ.!

தங்கையும் தாயவள் மூதாட்டி - என்று
ஔவையை தந்தவள் வாழியவே.!
எங்களின் நெஞ்சினில் என்றென்றும் - செம்மை
தங்கிடும் தாயவள் வாழியநீ.!

வங்கமும் தாண்டியும் வந்தாயே - நல்ல
சங்கமும் வைத்தவள் வாழியவே.!
திங்களைப் போலவும் தோன்றினாயே - நீயும்
கண்கவர்க் காட்சியாய்க் காவியத்தில்.!

நிறைமதி நீலமேகம்,
பெண்ணாடம்.

# அன்னைத் தமிழே வாழி !

(இலாவணி)

தமிழதனை தினமும்நான் தரணியிலே தாங்கிடுவேன்
தடைகளின்றிக் கிட்டிடுமே வெற்றி வெற்றி
அமிழ்தமெனப் போற்றிடுவேன் நானுமதை எந்நாளும்
அன்புடனே தரணியிலே சுற்றிச் சுற்றி.

வணக்கத்தைச் சபையோர்க்கு அடியேன்நான் கூறுகிறேன்
வாயாறத் தமிழினிலே போற்றிப் போற்றி
இணக்கமுடன் எழுதிடுவோம் இனிமையான பாடல்களை
என்றும்நாம் சபைதனிலே சாற்றிச் சாற்றி.

செம்மொழியாம் தமிழ்மொழியின் நனிசிறந்த பாக்களினை
செப்பிடுவோம் எந்நாளும் கேட்டுக் கேட்டு
நம்மைதினம் வாழவைத்து நன்மைகளைப் புரிகிறதே
நன்றான மெட்டுகளைப் போட்டுப் போட்டு

இனிப்பாக இருந்திடுமே இனிமேலே தமிழ்மொழியே
எந்நாளும் காத்திடுவோம் பார்த்துப் பார்த்து
கனிபோன்ற சொல்லாலே நம்மைதினம் மயக்கிடுமே
கச்சிதமாய் சந்தந்தனை சேர்த்துச் சேர்த்து

இயற்றமிழும் இசைத்திடுமே இனிமையான பாடல்களை
இயன்றவரை கேட்டிடுவோம் ரசித்து ரசித்து
கயவன்கூட திருத்திடுவான் தமிழ்மொழியால் எந்நாளும்
கவலையின்றி பாடல்களை ருசித்து ருசித்து.

திராவிடத்தின் மொழிகளிலே தமிழ்மொழிதான் மூத்ததுவே
திண்ணமுடன் கூறலாமே என்றும் என்றும்
கிராமத்திலே பேசிடுவார் இனிமையான தமிழ்மொழியை
கிட்டிடவே இன்னிசைதான் இன்றும் இன்றும்.

இர. அரவிந்த் கார்த்திக்

# அன்னைத் தமிழே வாழி !

(இலாவணி)

அன்னைதமிழ் சிந்தையிலே அன்புநிறை வித்தகமா
யன்னையாகி நல்லின்பத்தை ஊட்டும்! ஊட்டும்!
கன்னிப்பெண்ணாம் பைந்தமிழும் கார்மேகமா யின்சுவையைக்
கன்னல்நிறை கற்கட்டாக நீட்டும்! நீட்டும்!

பொன்மலராய்ச் சொந்தமாகி பொன்னிநதி தண்ணீராக
பொன்மொழியாம் தென்தமிழும் மீட்டும் !மீட்டும்!
தன்னிகரில் லாததொன்மை தன்மைபெற்ற விந்தைதமிழ்
தங்கமாக மின்னிமின்னி காட்டும்! காட்டும்!

மென்மைமிக்க தென்மொழியே மேதினியில் சித்திரமாய்
மேன்மைகொள்ளா நேரமதில் வாட்டும்! வாட்டும்!
குன்றுகளில் தோன்றிகொன்றை குன்றாப்புக ழால்சிறந்து
குன்றின்மணி யாய்மக்களை தீட்டும்! தீட்டும்!

கொன்றைபொன்னே உன்னைபோற்ற கோபுரமாய் நீண்டுவாழ்ந்து
கோமகளாய் நற்பெயரை சூட்டும்! சூட்டும்!
பொன்னிலுமே தண்ணிழலாம் பொங்கும்தமிழ் நல்லிசையை
பொன்னேராக நெஞ்சமதில் பூட்டும் ! பூட்டும் !

இன்பவடி வாகிதுன்பம் இன்றளவும் பற்றிடாது
இன்னிசையாய் நன்மைகளை நாட்டும்! நாட்டும்!
தன்னேரில்லா செம்மொழியே தன்னம்பிக்கை என்றும்தந்து
தாயுருவில் மூழ்கியேதா லாட்டும்! ஆட்டும்!

வான்புகழை பெற்றிருக்கும் வான்தமிழும் வையகத்தில்
வான்மழையாய் நான்மறையாய் வாழும்! வாழும்!
தோன்றலுயர் வண்டமிழே தோன்றின்புகழ் தொன்முறையே
தோய்வடையா மக்களையும் ஆளும்! ஆளும்!

மாலதி திரு
தஞ்சாவூர்

# அன்னைத் தமிழே வாழி !

ஆனந்தக்களிப்பு

தாயாயுன் னையடை வேனே - நாளும்
தங்கமா யுன்னைம தித்திடு வேனே
வாயாரப் போற்றிக்கொண் டாடு - உந்தன்
வாழும்க னாவிலும் வாழ்த்திக்கொண் டாடு.

மூவுல கையாலும் தாயே - எந்தன்
முக்தியை நன்றாய்மு டித்துவைப் பாயே
பாவுட னேநானும் வந்தேன் - அந்த
பாரத்தைத் தீர்த்துமே சக்தியைக் கொண்டேன்.

விண்ணிலும் உன்னாட்சி வாழ்க - என்றும்
வீரத்து டனேவ ளமுடன் வாழ்க
மண்ணிலும் உன்னாட்சி வெல்க - இந்த
மூடர்கள் கூட்டத்தை முன்னின்று வெல்க

உள்ளத்தைப் பற்றிய நீயே - எந்தன்
உண்மையின் ஊற்றாய்ப றைச்சாற்று வாயே
தள்ளாடும் வாழ்வுவந் தாலே - என்னை
தங்குத டையின்றி பேசவைப் பாயே

ஆனந்த தாண்டவ மாடி - எங்கும்
அன்பினை அள்ளிக்கொ டுத்திடு ஓடி
கானகக் கூட்டங்க ளெல்லாம் - வந்து
காதலைச் சொல்லுமே கண்களி ளெல்லாம்.

நாவினில் வந்தாடும் தாயே - கொஞ்சம்
நாதத்தை நன்றாக எந்நாவில் தாயேன்
தாவித்தான் நீவிளை யாடி - எங்கும்
தன்னைம றக்காதே நம்மக்கள் கோடி

சதீஷ் காளிதாஸ்

# அன்னைத் தமிழே வாழி !

கலிவிருத்தம் - காய்முன் நிரை

முத்தமிழில் கவிபுனைய
முதுமொழியை உடனழைத்தேன்;
சித்தமெலாம் தமிழதனைச்
சேருமட்டும் தவமிருந்தேன்;
இத்தகத்தில் தமிழினைப்போல்
இனிமையுள மொழியுளதோ!
வித்தகமாய்ப் பலசுவைகள்
வியந்திடவே முடிவிலையே!!

புத்திரனாய் எனையீன்ற
புதுமொழிக்கோர் உயிர்தருவேன்!
மித்திரனாய் எவர்வரினும்
மொழியினுக்காய் உயிரெடுப்பேன்!!
நித்திலமே! அகில்புனுகாய்
நறுமணங்கள் சுகந்ததடி!!
முத்தெனவே பவளமொழி
மனதையெலாம் வருடுதடி!!!

சித்தகத்திப் பூவிழியாள்
சிலையதுவாய் உறைந்துவிட!
மொத்தமுமென் தமிழணங்கை
மொழிந்திடவோ முடியலையோ!!
தித்திக்கும் தமிழ்க் கனியாய்த்
திசையெட்டும் வலம்வருவோம்!!
எத்திக்கும் தமிழதனை
ஏருழுதி விதைத்திடுவோம்!!!

கவின் மொழி வர்மன்

# அன்னைத் தமிழே வாழி !

கலிவிருத்தம்

முன்னைக்கும் முன்னம்பல முன்னோரைப் பெற்றெடுத்து
பின்னைக்கும் பின்னும்பல  பெரியோரைப் புரந்தெடுத்து  .
அன்னைக்கும் அன்னையென ஆனவளே தமிழ்த்தாயே
என்னைநீ நினைத்தனையோ எனையிங்கு பெற்றெடுத்தாய்

ஆதியிலே மலைமுகட்டில் அவதரித்த காரிகையே
நீதியென்னும் ஆட்சிமுறை நிறைத்துவைத்த பேரிகையே
ஓதியுன்னைப் புகழ்ந்தெடுக்க ஓடிவந்த அறிஞர்களின்
தீதிலாத திருவருளே திகைப்பிலாத பேரருளே

சிலம்பணிந்து மணிபுனைந்து சிரித்துவரும் சித்திரமே
வளம்புனைந்த பாண்டியனார் வானகன்ற மீன்கொடியே
நலம்படைத்த காவிரியின் நாற்புறத்தும் பாய்பவளே
கலம்நிறைக்கும்  பாலமுதே கனிந்தொழுகும் தேன்மழையே

தென்பொதிகைச் சந்தனத்தின் தேன்கலந்த வண்டினிசை
உன்பதிகச் சந்தத்திற்கு உயிர்பதிக்கும் ஆற்றல்தரும்
என்பதிகச் சிந்தனைக்கும் ஏற்றவருள் செய்துவைத்த
நன்பதிகம் உன்னையன்றி நாட்டிவைக்க வல்லவர்யார்

பொன்னிஎன்னும் நதிப்புறத்து போய்ப்படர்ந்த நிலமடந்தைப்
பெண்ணையிங்கு என்னசொல்லி பேசவென்று தெரியவில்லை
கன்னிஎன்றும் கவிதைஎன்றும் கனித்தமிழர் அன்னைஎன்றும்
உன்னைஎன்றும் போற்றிநின்றோம் உயிர்த்தமிழே வாழியவே

வாழியநீ உலகமெங்கும் வான்புகழந்து ஏற்றும்வகை
தாழிசையாய் தளிர்கரும்பாய் தாங்குகின்ற தண்ணளியாய்
ஏழிசையாய் எழில்நிலவாய் எழுங்கிழக்குத் திகிரியுமாய்
வாழியநீ அன்னைத்தமிழ் வாழிவாழி வாழியவே

சித்தார்த்பாண்டியன்
மதுரை

# அன்னைத் தமிழே வாழி !

(வெண்பா)

வல்லினமும் மெல்லினமும் வாழ்த்துரைத்தே கும்பிடுமாம்
நல்லிடையாம் சொல்லுடையை நாவணிந்தே தெம்புறுமாம்
புல்லினமும் சொல்நகையால் புன்னகையே சிந்திடுமாம்
முல்லையின முத்தமிழின் முன்பு !

அன்புறவே செய்யகரம் ஆற்றலுறச் செய்யிகரம்
இன்புறவே செய்யுகரம் இங்ஙனமாய் மெய்ச்சிகரக்
பொன்பொருள்போல் நின்றுயரும் பூந்தமிழால் உய்வடைந்தே
நன்றுலகும் வாழ்த்திடுமே நின்று !

ஓரெழுத்தும் சொல்விளைக்கும் ஒப்பில்லா மேன்மொழியே
பாரெளச்சொல் நெல்விளைத்த பண்பாட்டின் வான்மொழியே
தேரெளல்போல் ஞாலமொழி தெய்வத்தாய் என்மொழியை
பாரன்னை என்றறையும் பார் !

அன்பொளிரும் சந்திரனாய் அன்னையவள் மென்முகமாய்
இன்பொலிசெய் மென்மைவந்தே இப்புவின் - முன்பொலிய
மென்தமிழும் ஆகியதாம் மேதினியின் அன்னைமொழி
துன்பமெலாம் போக்கிவிடும் தாய் !

வாரியும் தாழவே வாழ்தமிழ் வாழ்கவே
பாரின் முதல்நிலப் பண்டமிழ் வாழ்கவே
சீரிய முத்தமிழ்ச் சங்கமம் வாழ்கவே
வீரியச் செம்மை விளைத்து !

பண்டைக் குமரியின் பண்மொழி வாழ்கவே
அண்ட மொழிகளின் அன்னையே வாழ்கவே
என்றும் உலகன்னை என்றுயர்ந் தாழியும்
வென்றனை வாழ்வையும் வென்று !

முனைவர் த . செல்வராசன்

# அன்னைத் தமிழே வாழி !

(வெண்பா)

நிலம்கண்ட மூத்தமொழி நின்றிலங்கும் என்றும்
விலங்கனைய மாக்களுக்கும் வீட்டறிவை யூட்டும்
புலங்கடந்து சென்றும் புலன்களிலே தங்கும்
மலரதுபோல் ஓங்கட்டும் மாண்பு

நித்திலம்போல் நிற்குமொழி நீணிலத்தார்க் கன்னைமொழி
சித்திரம்போல் சீலமொழி சீர்மையுடைச் செம்மொழி
புத்துயிராய் ஓங்குமொழி பூமியெங்கும் பூக்குமொழி
தித்திக்கும் என்றும் திகழ்ந்து

வேர்ப்பலாப்  போன்றமொழி வேதனைகள் தீர்க்குமொழி
கார்பருவக் காட்சிமொழி கற்பகம்போல் ஈயுமொழி
நேர்வழியில் நிற்பதற்கு நேயங்கள் நாட்டுமொழி
பூர்வீக நம்மொழியைப் போற்று

மன்றமூன்று கண்டமொழி மாமன்னர் காத்தமொழி
என்றுமிளங் கன்னியைப்போல் ஏற்றமுடன் நிற்குமொழி
குன்றின்மேல் தீபம்போல் குன்றா தொளிருமொழி
என்றுமே இல்லை இறப்பு

மேன்மக்கள் போற்றுமொழி மேதினியில் மேன்மைமொழி
நான்மறைகள் நாட்டுமொழி நாடாளும் நாமமொழி
வான்கடந்து நிற்குமொழி வாலிபத்தேர் ஓட்டுமொழி
தேன்மொழியைத் தெய்வமென்போம் தேர்ந்து

பாமரர்க்குப் பாட்டுமொழி பாதகரை ஓட்டுமொழி
தேமதுரத் தித்திப்பால் தேசத்தார் ஏத்துமொழி
சேமமுற யாவர்க்கும் செங்கதிராய் ஓங்குமொழி
நாமத்தைப் போற்றுவோம் நன்கு

கவிஞர் முகிலை பாஸ்ரீ

# அன்னைத் தமிழே வாழி !

(அறுசீர் விருத்தம்)

எண்ணும் எழுத்தும் தமிழாகி  ஏற்றந் தந்தாள் அமுதாகி
கண்ணுங் கருத்தும் புலனாகி கவிதை உகுத்தாள் கலனாகி
வண்ணம் நிறைந்து வனப்பாகி வடிவங் கொடுத்தாள் உருவாகி
மண்ணில் மாயோன் குழலாகி மரபில் நிறைந்தாள் இழைந்தேகி

மூப்பால் மொழிகள் தாயாகி முதுமை கொண்டாள் அழகாகி
யாப்பால் எமக்குள் இதமாகிய வனம் கூட்டிப் பதமாகி
காப்பாள் கலப்பைக் களைந்தேகி கனிவாள் அன்னைக் கருவாகி
தோப்பாய் வளர்ப்பாள் தொகுப்பாகி தொடர்வாள் தொன்மை துளிர்ப்புடனே

பொன்னும் பொருளும் வேண்டாளே புகழும் பணமும் தீண்டாளே
மன்னும் அழகுச் செண்டாளே மனத்தை மயக்கும் சொல்லாளே
நன்னூல் பலவும் தந்தாளே நல்லார் புலமைக் கண்டாளே
முன்னே பிறந்த பிறப்பாலே மூத்தாள் அழகில் இளையாளே

எண்ணற் கரிய இலக்கியங்கள் எதுகை மோனை இயைபுகளில்
கண்ணில் புகட்டும் காவியங்கள் கலிப்பா வெண்பா கவிநயங்கள்
அண்டி வரவே ஆயிரமாய் அழகுக் குவியல் கொண்டவளாம்
கண்டம் தாண்டி தன்பெருமை கடல்கள் கடந்து நிறைந்தவளாம்

முன்னர் பலரும் மூவேந்தர்  மொழிப்பால் அருந்தி மெருகூட்டி
பன்னாள் கடந்தும் பளிச்சிடவே  பசுமைப் பயிராய் வளர்ந்தவளாம்
பின்னர் பிறரும் அவளழகில்  பெரிதாய் மயங்கி வழிவகுத்தார்
இந்நாள் வரையில் அவள்வழியில்  இடர்கள் இல்லை தடுப்பதற்கே.

கம்பர் இளங்கோ திருமுனிகள்  கனிவார் சொல்லில் பொருள்கொடுத்தே
நம்பற் குகந்த நனியழகில்  நயமாய் வைத்த இலக்கணங்கள்
தம்முள் தழைக்கச் செறிந்தவளாம்  தந்தார் செந்தொல் காப்பியரும்
எம்முள் இயைந்தத் தமிழமுதாள்  இனியாள் வாழ்க, வாழ்த்துவமே !

கண்ணன் கோபாலன்

# அன்னைத் தமிழே வாழி !

(அறுசீர் விருத்தம்)

(கூவிளம் புளிமா கருவிளம் தேமா கூவிளம் கூவிளங்காய்)

ஆதியி லியன்ற வருந்தமிழ்ச் சொல்லின்  ஆற்றலில் பாடுகிறேன்
ஓதியப் பொழுதி லுயர்வினை நல்கும் ஓங்கியே கூவுகிறேன்
பாதியில் முளைத்த பலவிதக் கேட்டால்  பைந்தமிழ் நாணுவதோ?
நீதியில் திளைத்த அகம்புற மாந்தர் நித்திரைப் பூணுவதோ?

கோடியாம் பெருமை நிலத்தினிற் கொண்டோம் கொட்டிய வான்மழையாய்
வாடுவ தெதுவும் தலைமுறைக் கில்லை வாய்த்தது தொன்மரபால்
கூடிய மகிழ்வை அமுதென ஈந்தாள் கொஞ்சியே தாய்த்தமிழாள்
தேடிய வரமாய் முகவரி வாய்க்க துள்ளுவோம் வாழ்த்தொலியால்

ஆவியி லுணரும் இலக்கியம் யாவும் ஆர்த்தெழும் மாக்கடலே
சாவிலு மகலா உறவிது தானே சாரலின் பூம்புனலே
பூவிழும் மொழியில் புதுப்புது வாசம் புத்தொளிச் செந்தமிழே
தாவியே தவழ்ந்து மனத்தினி லேற்றி .தாயினை வாழ்த்துவனே

உள்ளொளி பரப்பி உயிரினில் வாழும் ஊக்கமே வாழியவே
தெள்ளிய வமுதாய் வழிகிற இன்பத் தேக்கமே வாழியவே
வள்ளுவன் குறளில் உலகெலா மாண்டு வானுற வாழியவே
முள்ளுறை மனத்தை மலரென மாற்றும் முத்தமிழ் வாழியவே

விசு. இம்மானுவேல்
பெங்களூரு.

# அன்னைத் தமிழே வாழி !

எழுசீர் ஆசிரிய விருத்தம்

அன்னை தமிழாம் அமுதாம் தேனாம் ஆருயிர்க்கு இன்ப வூற்றாம்
கன்னித் தமிழாம் கருணைப் பேராம் காலமிதற் கில்லை தானாம்
இன்பத் தமிழாம் இதய மீதாம் ஈடுசொல்வார் பாரில் யாராம்
நன்னர் தமிழாம் நலமே சேர்மாம் நாடுவார்க் கேத மின்றே

கொள்ளை இன்பம் குலவும் பாரு கோலம்செய் சங்கப் பாவும்
அள்ளக் குன்றா அமுதம் கேளு ஆகாஎல் லையில் நூலும்
விள்ள முடியா சிறப்பு பாரு வீரத்தின் சீர்மை கூறும்
துள்ளும் உள்ளம் சொலநீ கேளு தூய்தமிழ்க்கு நேர்யா தென்றே

முன்னைப் பிறந்தாய் முழுது மானாய் மூப்பில்லா கன்னி யானாய்
அன்னை மொழியாய் அகிலம் யாவும் ஆண்டிடு அரசி யானாய்
தன்னை நிகர்பாய் தகவில் மிக்காய் தாழ்புவிக்கு நற்றா யானாய்
என்னை எடுத்தாய் எழிலும் தந்தாய் ஏதுனக்குச் செய்கைம் மாறே

வானின் உயர்வள் ளுவமும் சங்க வளமார்தொ கையும் பாட்டும்
தேனின் நிகர்கா வியமும் தெய்வம் தொழுதிடுதே வாரப் பாவும்
ஊனின் மிகவே உறுதி கொள்ளும் உயரியற நூலும் மேலாம்
தேனின் இனிய சிலம்பு வொப்பில் தொல்நூலும் காண லாமே

வாட்டம் தவிர்க்கும் வளமார்த் தமிழாம் வானினுமிக் கோங்கிய மொழியாம்
நாட்டம் மிகுக்கும் நலமார்த் தமிழாம் நாள்தோறும் காத்திடும் மொழியாம்
தேட்ட முடனே தொடரரும் தமிழாம் தேசமுய்ய வாய்த்திடும் மொழியாம்
கோட்ட மதனைக் களையும் தமிழாம் கோலமிகு தீந்தமிழ் மொழியே

ஒண்டமிழ் மொழிநீ ஒளிதிகழ் மொழிநீ ஒப்பிலாத மொழியும் நீயே
வண்டமிழ் மொழிநீ வடிவுடை மொழிநீ வாழ்வளிக்கும் மொழியும் நீயே
தண்டமிழ் மொழிநீ தகவுடை மொழிநீ தனிதியங்கு மொழியும் நீயே
பண்டமிழ் மொழிநீ பலர்புகழ் மொழிநீ பாங்குடைய மொழியும் நீயே

கவிஞர் இளையதீபன்

# அன்னைத் தமிழே வாழி !

எழுசீர் ஆசிரிய விருத்தம்

சிவனவர் வாக்கில் சிறந்தாய் தமிழே
சிகரமாங் கயிலையி லொலியாய்
தவமிகு நால்வர் தவப்பயன் நிறைத்தாய்
தழல்போல் அல்லலும் அகற்றி
உவப்புற நின்றே உலகினில் வாழ்நாள்
உயர்த்தியே நலம்பல விளைத்தாய்
பவமதும் விலகப் பயின்றிடு தமிழின்
பண்ணிசைத் திருமுறை நீயே

எண்ணமும் திண்மை யெழில்மிகுத் தாயே
எண்ணிட இனிதிருந் தாயே
விண்ணினில் தோன்றி விரும்பியே நிலத்து
விளங்கிய நிறைவுடைத் தாயே
மண்ணினில் சிறந்து மகிழநின் றாயே
மலைப்புறும் வளங்கொளுந் தாயே
கண்ணினில் மணிபோல் காத்திடு வாயே
கலங்கிடாத் துணையெனக் குநீயே

மூத்தவள் சிறந்தாள் முடியுடை மன்னரால்
முந்தியே உதித்தவள் வாழ்க
சொத்தவள் என்றும் சொந்தமாய் நின்றே
சொற்றிறம் மிகுத்தாய் வாழ்க
பூத்தவள் எங்கும் புவனமே நிறைந்து
புகுந்தவள் புதையலாள் வாழ்க
நித்தமு முதிக்கும் நித்திலம் அவளே
நிறைவாம் தமிழவள் வாழியவே

சுப. சாவி

# அன்னைத் தமிழே வாழி !

சீரோடும் சிறப்போடும் சிங்கார எழிலோடும்
பாராண்டு வந்த தமிழே ! - உனை
சீராட்டிப் பாராட்டி  சிந்தைக்குள் உனைச்சேர்ப்பேன்
சீராகக் கொஞ்சு தமிழே !

பாரோர்கள் எல்லோரும் பாராட்டும் தேசத்தில்
பாவரிகள் தந்த தமிழே ! - உனைத்
தாராள மாய்ப்பாடித் தாரணியில்நானுயரும்
தன்மானம் கூட்டு தமிழே!

வானாதி வானவர்கோன் வையத்துத் தமிழ்மகனாம்
வடிவேலன் கண்ட தமிழே ! - வாய்
வாராத பிள்ளைக்கும் கலைத்தாயின் அருள்தந்து
கவிபாட  வைத்த தமிழே !

ஆலால கண்டனுடன்  அகிலாண்ட  நாயகியாய்
அன்றாடம் காக்கும் தமிழே ! இந்த
ஞாலத்தி லெங்கணுமே நன்றாக
ஆலெனவேக் கோலோச்சி நிற்கும் தமிழே !

வானத்து வில்லெனவே வண்ணமுடன் சாலங்கள்
காட்டிவரும் வண்ணத் தமிழே ! - உயர்
ஞானத்தைத் தமிழர்க்கு நன்மைபெற
அருள்செய்வாய் ஓங்கார மானத் தமிழே !

தாயாகி எனதினிய தந்தையுமே ஆனவளே
தமிழ்மாந்தர் போற்றுந் தமிழே ! - நல்ல
வாயாலும்  மனத்தாலும் வையகத்தில்
உனைப்பாட வரமொன்று நல்கு  தமிழே !

இயக்குநர் சிவா. ஜி